

அகவை 98 வரை

# வாழ்ந்துகாட்டிய வரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும், இல:126, D-10, உருத்திரபுரம் மேற்கு, உருத்திரபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# குட்டிப்பிள்ளை கந்தையா

அவர்களின்


அமரத்துவம் குறித்து ஆக்கப்பெற்ற

31ஆம் நாள் நினைவு மலர்

## 27.02.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாதார விந்தத்தில்
# பா மலர்ச் சமர்ப்பணம

புல்லும் சிலும்பாது பூம்பாதம் மெல்லவைத்து
நெல்லும் வயலுமென நேர்மைவழி நடந்து
அல்லும் பகலும் அயராதுழைத்துழைத்து
கொல்லும் துயரங்கள் நோயிருந்து காப்பாற்றி
வெல்லும் வழிவகைகள் வேதமெனச் சொன்னவரே!
சொல்லும் செயலும் மாறாத பண்புடனே
எல்லோரும் போற்ற வாழ்ந்திட்ட வரமே!
இல்லமிது சிறக்க இனிய பலசெய்தவரே!
நல்ல தலைவனென வாழ்ந்து வழிகாட்டினீரே!
எல்லாம் எமக்காய் என்றென்றும் வழிகாட்டி
வல்லான் வகுத்தபடி வாழ்ந்து முடித்தவரமே!
வைத்தோம் பாதத்தில் பா மலர்ச் சமர்ப்பணங்கள்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

இங்ஙனம்
பாசக் குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"



அவனியில்
10
10
1923

அரனடியில்
28
01
2021

அமரர்

# குட்டிப்பிள்ளை கந்தையா

அவர்களின்

## திதி வெண்பா

ஆண்டு சார்வரி அருந்தைப் பூசமதில்
பூண்ட திதி பூரணையும் பொருந்திவர– நீண்ட புகழ்
மாதவனார் கந்தையா மாணிக்கப் பிள்ளையிறை
பாத முறைந்தார் பணிந்து.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைவனின் அணைப்பில்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

# தேவாரம்

அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ
ஒரு குலமும் சுற்றமும் ஓரூரும் நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ
துணையாயென் நெஞ்சந்துறப்பிப்பாய் நீ
இப்பொன் நீ இம்மணி நீ இம்முத்தும் நீ
இறைவன் நீ ஏறூர்ந்த செல்வன் நீயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ (து) இனியே

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக் கண்ணுடைய தோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் மற்புதக் கூத்தா
அம்பொன் செய் அம்பலத் தரசே
ஏறணி கொடி யெம் ஈசனே யுன்னைத்
தொண்டனேன் இசையுமாறிசையே.

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக் கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமையணவாளனுங் காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்
பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போது உன்னடியின்
கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

ஏறுமயி லேறிவிளை யாடுமுகமொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுகமொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்த்த முகமொன்றே
குன் றுருவ வேல் வாங்கி நின்றமுகமொன்றே
மாறுபடு சூரனைவ தைத்தமுகமொன்றே
வள்ளியை மணம் புணர வந்தமுகமொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்தபெரு மானே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க ! மலிவளஞ் சுரக்க! மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க!
நான்மறை யறங்கள் ளோங்க! நற்றவம் வேள்வி மல்க!
மேன்மை கொள் சைவநீதி விளங்குக! உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் குட்டிப்பிள்ளை கந்தையா
# அவர்களின் வாழ்க்கைச் சுவடுகள்...

தாய்த்திரு நாடும் தனிச்சிறப்பும்

.............................................

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே – அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே – அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே – இது
தந்தையின் தாய்த்திருநாடு என்பது
தனிப்பெருஞ் சிறப்பாகும்
விந்தைகள் ஆயிரம் விரிந்து விளங்கிடும்
வீரப் பொன்னாடே

நாற்புறமும் அலை வீசும் நானிலங்கள் கொண்ட வளநாடு
பாற் பசுவும் பனம் பொருளும் பசுமை தரு நாடு
காற்றினிலே தென்றல் வந்து கவிபாடும் நாடு
ஊற்றெடுக்கும் உணர்வோடு உயிரணைக்கும் நாடு
சாற்று புகழ் சந்ததிகள் வாழ்ந்த திருநாடு

மாற்று நோய் மருத்துவங்கள்
மலர்ந்த மா மலைநாடு
போற்றும் உயர்பண்பாளர்
பொலிந்த திருநாடு

கூற்றுவனும் குலைநடுங்கும்
கூடாயுள் கொண்ட திருநாடு
மாற்றானும் மனம்நிறையும்
மகிழ்விருந்து நாடு
இத்தீவின் இருமரபும் தூய தனிநாயகமுதலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிய வழித்தோன்றல் நற்பெரு வீரரென குட்டிப்பிள்ளை நல்லதிரு மாதவத்தாய் சின்னத்தங்கம் உற்ற அன்பு இணைப்பினிலே உதித்த நல் முதல் மைந்தன் கண்ணியனார் கந்தையா நற் தவத்தால் பிறந்து வளர் நற் கலைகள் கற்று உருத்திரபுரத்தின் முதற் திருமணமாக உற்றவர் பெற்றவர் ஊரார் போற்றிட வாழ்த்திட பெரும்புகழோடு சுற்றத்தார் போற்றும் உயர் மாந்தன் வர்த்தகனார் கந்தையா வாய்த்த நல் அன்னப்பிள்ளை பெற்ற திருமகளாம் பொன்னம்மாவை உற்றநல் அன்பினிலே கரமிணைத்து களிப்புடனே இல்லற வாழ்வில் இங்கிதம் கண்டிட

இந்துவின் முத்து ஈழத்திருநாடு
இனிதான கிளிநொச்சி அதன் இதயக் கூடு
குளங்கள் கூடிய வளங்கள்
பசுமை விளையும் நிலங்கள்
நெல்மணி விளையும் பச்சை வயலும்
நேசங்கள் நிறைந்த பாசத்தின் அயலும்
நீரோடும் வாய்க்காலில் துள்ளும் கயலும்

பசுந்தீவும் படை நடுங்கும் நெடுந்தீவு
விசும்பாமல் திமிரோடு நீ கூவு
பசியாற பண்பாளர் பரிமாறும் விருந்தோம்பல்
குசியான சிரிப்போடு வரவேற்கும் இளவேந்தல்

அந்தி வானில் சாயும் கதிரே
மந்தி தாவும் மருதமரக் குளத்தருகே
மகேசன் தலம் உருத்திரபுரீச்சரமே

பண்பின் மேன்மை கொள்ளும் உருத்திரபுரம்
மகிழ்ச்சி சூழ்ந்த மனங்கள் வாழும் வரம்
முயலும் உறுதியில் உழவர் உழைப்பு
செயலும் ஓங்கியவர்களில் இல்லைக் களைப்பு
மா பலா தென்னையுடன் தருவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ உலாவும் பறவைகள் கூவும் தெருவும்
வாழைக் கனியும் கமுகின் சோலை
நாளை இனிதே விடியும் காலை
அறநெறியுடன் இயங்கும் குருகுலம்
ஆரோபணம் அமைந்த சிறந்த நிலம்
மாணிக்கப் பிள்ளையாரின் மணியோசை
மகிழ்ந்து விளையாட அரங்கத்தில் ஆசை
நெகிழ்ந்து பேசியிருக்க கந்தையர் முற்றமும்
முதல் மாப்பிள்ளையாய் உலாவந்த சுற்றமும்
பந்தயம் பகிடிகள் கற்ற விண்ணர்
அன்றைய நாளில் அனைவரின் அண்ணர்
சிந்தையும் சிறப்பும் சீரான வாழ்வும்
முந்தையர் எதிரில் பணிவான தாழ்வும்
கந்தையா என்றால் கனிவான பேச்சு
குந்தகமில்லாக் குணமதே இவரது மூச்சு
சந்ததி தாங்கிய தசாப்த வரம்
நூற்றாண்டை எட்டிய அன்புக் கரம்
மக்கள் மருமக்கள் இவரது கிளைகள்
பேரர்கள் பூட்டர்கள் பெற்றார் உயர்வான நிலைகள்

அந்த வகையில் பெற்ற நற் பிள்ளைகளாம் கமத்தொழிலின் போதகனார் கணேசலிங்கம் உடன்பிறப்பாய் உயர் குணத்து உத்தமியாள் பிரியசாந்தா, ஆற்றல்மிகு விளையாட்டு வீரன் அதிகாரி விந்தை மிகு சாதனையான் அமரர் புவனேந்திரராசா(சிவா), நற் கலையில் நாடகத்தில் நகைச்சுவையினாளன் விளங்கு புகழ் விக்கினேஸ்வரன் (கிருபா), மெச்சிடவே விளையாட்டும் மேன்மைமிகு கவியும் காத்திரமாய்க் கொண்டமைந்தன் மகேஸ்வரனும் போற்றும் உயர் கூட்டுறவின் முகாமையாளன் குணக்குன்றாம் குக குமாரராசாவோடு கடைக்குட்டி மகனாய் விந்தைமிகு விவசாயத்துறையதனில் தந்தையவர் தொழில் தொடரும் வல்லோன், மகத்துவமாய் மாணிக்கப்பிள்ளையார் பந்தல் சேவையோடு கிராம நற்பணி மைந்தன் பிரபாகரன் என்னும் பெரும் பேறாய் பிள்ளைகளைப் பெற்று வளர்த்து அன்பூட்டி அறிவூட்டி அமுதுமூட்டி பண்போடு பல கலையும் கற்று தென்போடு வாழ வழிவகைகள் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து இன்போடு இல்லறத்தில் இணைந்து சுகம் காண இங்கிதமாய் இணையர்களை இணைத்து மகிழ்வித்தார் அவ்வகையில் கனிமொழியாள் கலாதேவி கணேசனவன் காதலியானாள், தரணிபுகழ் தயை குணத்தான் தர்மநாயகம் (போக்குவரத்து பரிசோதகர்) பிரியமுடன் கரமிணைத்த பிரியசாந்தா , சீரிய குணத்தான் சிவாவொடு அகமிணைத்து அரியகுண அன்பெழிலாள் கோணேஸ்வரியும் கிருபாபின் இதயம் நிறை பக்குவத்தாள் பண்புடையாள் பவானியும், கருணாவின் கரமிணைத்த வித்தகியாய் விளங்கு நல் கலைகள் கற்ற உத்தமியாள் பவாவும், குகாவின் வரமாய் கூடிய குலமகள் வித்தியகுமாரியும் ,பிரபாவொடு பிரியமாயிணைந்த பெருந்தகையாளிவள் தயாநிதியும் மருமக்களாக மாண்புற மலர்ந்தனர்.

இப்பெருங்குடும்பக் கூட்டினில் குதுகலமாக சொல்லரும் புகழ் தோய் வல்லரும் பேர் புகழ் பேரர்கள் பேத்திகள் பூட்டன் பூட்டிகள் நாட்டமாய் நல்லறப் பூங்காதனிலே நறுமணம் வீசியே நாளும் மகிழ்ந்தனர்.

இல்லறப்பூங்காதன்னில் இனியமுதற்பேரனாக வல்ல கவிவாணனென விளங்குமாபுகழில்மிக்க செல்லமாய் சுரேசனும் மற்றநற்பேரன் மாசிலாக்குணத்தினன் றமேசனும் ஆசையாய் முதற்பேத்தி நுண்கலைப்பட்டதாரி நடனக்கலை ஆசிரியை ஆடல்வல்லாள் பிரியாவும் இளையவள் விளங்கு நற்குணத்தாள் வித்தகி வித்தியாவும் இவர்களோடு துலங்கு நல் துறையின் நுண்கலை மானி யதார்த்திகாவும் இன்னவளோடு இளையவனான இனிய நற்பேரன் பிரார்த்தன் பொறியிலாளன், கலகலக் கவின் எழில் கவினாவும் மின்னியல் துறை சார் தொழில்நுட்ப வல்லான் நிதார்த்தனும் அன்னவரோடு

மருத்துவ துறையியல் மாதெனத் திகழ்ந்தவள் கற்பனைத் திறனொடு கவி வரை ரதீசியாவும் நற்துறை வல்லுனர் பொறியியலாளர்கள் ரதீபன், ரதீபா, சங்கீர்த்தனா என சாதனையாளர்களோடு சிறந்திடு புகழுடன் கனடாவாழும் மாண்புறு மலரவன் பேரன்புக்குரிய பேரன் இவனே வணிகத்துறையின் வல்லுனனாவோன், பூங்கொடி இனிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேத்தி உடலுள நலம்சார் சுகாதார வித்தகி துசானியாகும்.
பிரான்சு நாட்டினில் பிறந்து வளர்ந்து பெரும்புகழ்பூத்திடும் பேரப்பிள்ளைகள் பிரவீன் பேரன் பொறியியல் வல்லுனன் அவனுடன் பிறந்த அட்சரா அன்பெழில் அறிவியல் இரசாயனத் துறையினில் அறிவொளி முகத்தினள் அஷானா இவரும் கணிதத்துறை சார் வித்தகியாக விளங்கிடும் சிறப்பொடு அன்பறிவாற்றல் நுண்துறையாளன் ஆதித்தனோடு பயனுறு கல்வியில் சிறந்து ஓங்கும் பாலகி பவஹர்ணியும், பாசமாய்ப் பிணைப்புடன் கல்வியும் விளையாட்டும் கண்ணெனக் கொண்ட கடைசிப்பேரன் லட்சியனோடு இலங்கிடும் இல்லறம் தன்னில் பூத்துக் குலுங்கிடும் பூட்டப்பிள்ளைகள் யகிசன், சகேஸ்னா, அபிசன், அனிகா, அபினேஸ், ஆயீசன் அழகாய் மலர்ந்த அன்புக் குழந்தைகள் இத்தனை சொந்த பந்தங்கள் கண்டு இல்லறந்தன்னில் நல்லறம் செய்து இறையருளோடு சங்கமித்தார்.

உடன்பிறந்த சகோதரர்கள் பத்துப்பேர்
பாசமுடன் பாரினிலே பண்புடனே
தேசமிது புகழ்திடவே வாழ்ந்தனரே
அதனன்பு வரிசையிலே....
அக்காக்கள் அன்னப்பிள்ளை அழகுநல் நாகம்மாவும்
இளையவரில் இனியவராய் இராமநாதன்
இவர்களோடு இலங்குபுகழ் நாகலிங்கம் இனியவளாம் பொன்னம்மாவும் தரணிபுகழ் தம்பியவன் தர்மலிங்கம் மான்புமிகு மனிதநேயன் மயில்வாகனமும்
கனிந்திட்ட கண்ணியனாம்
கடைசித் தம்பி பரமலிங்கம்
பண்பான பாசத்தங்கை பராசக்தியோடு இளையவளாம்
இனியதங்கை இராசமணி இவர்களிந்த
இனியமகன் கந்தையா உடன்பிறந்த பாசத்தின் பந்தமானோர்
சொந்த நற்சோதரங்கள் துணைகளாக
வந்த நற்சொந்தங்கள் சொல்வோம் இங்கே ..........
செல்லமென அன்புடனே அழைத்து மகிழும் முதல் அக்காவின் கணவரிவர் செல்லமாகும்.
நல்லக்கா நாகம்மா நாயகனார் கையலாயபிள்ளையுமே அத்தானாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்று புகழ் பொறுமைமிகு தெய்வானைப்பிள்ளை
சாற்றும் உயர் பண்பழகில் பரமபூபதியாய்
பார்போற்றும் உத்தமியே
ஆற்றல்மிகு அன்புடையாள் அந்தோனியாப்பிள்ளை நல்லாற்றல் திறன் மிகுசேர் நாகேந்திரனார் அறிவோங்கி சிறந்தவளாய் அன்னக்கிளி மாசில்லா மனத்தவளாய் மகேஸ்வரியும் சொல்லினிய நல் மனத்தான் சுப்பிரமணியம் சோர்வறியா வல்லவனாய் இரகுநாதன் சொந்த நற்சோதரங்கள் துணையாய் வந்தோர் கண்டோம் அந்த நல் வரிசையிலே அமைந்த அன்பும் மைத்துணர்கள் மைத்துணி மகிமை மிக்க குலமகளாம் குணத்தின் குன்று குணமணியும் குவலயத்தில் வர்த்தகராய் புகழ்பூத்த நல்லான் நல்லையாவும் செப்பரிய திறன்மிகு நல் தபால் அதிபர் தம்பிஐயா ஒப்பில்லா அன்பினிலே இணைந்து வாழ்ந்தோர்.

நல்லவர் இறந்தும் வாழ்வார்
நானிலம் போற்றும் உண்மை
இல்லமே இறைவன் கோயில்
இவர்களே தெய்வமாவர்.
நல்லதைச் செய்து வாழ்வோம்
நாடிதே சொர்க்கமாகும்
இல்லையென்றெதுவும் சொல்லா
இதயமே இன்பமாக
வல்லவன் வகுத்தபாதை
வாழ்ந்து நாம் பயணம் செல்வோம்
எல்லைகளில்லா அந்தப் பேரின்ப
வாசல் காண்போம்....

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மாவின் பரிவில் ஐயாவின் வாழ்வு

தப்பாது எந்நேரமும் தன்களைப்பாறாது
அப்பாவைப் பார்த்திட்ட அம்மா என்றும் பொன்ன(அ)ம்மாதான்
உப்போ புளியோ உள்நாக்கில் சுவைபார்த்து
கப்போடு இளஞ்சூட்டு நீரேந்தி
எப்போதும் இவரருகில் இருந்து பணிசெய்தவரே
இப்போது எல்லாம் வெற்றிடமாய்

ஐந்து மணிக்கெல்லாம்
அலாரமது வைத்ததுபோல்
அவசரமாய் தானெழும்பி
ஆறுமணியாவதற்குள்
ஐயாவைக் குளிப்பாட்டி
ஈரத் தலைதுவட்டி
நெற்றியிலே நீறிட்டு
சந்தனத்தைத் தான்குழைத்து
சக்கரமாய் பொட்டிட்டு
மாப்பிள்ளை கந்தையரை
மகராசனாய் இருத்தி
சாப்பிடச் சத்துணவும்
சட்டியில் போட்டுக்குழைத்து
கூப்பிட்டு நொடிக்கொருதரம்
ஐயா ஐயா என்று
சாப்பிட வைக்கும்
சலிப்பிலா முகம் அம்மாதானே
அருகிருந்தனைத்தும் ஆதரித்தாயே
எல்லாம் அவர் நினைவே
எல்லாமும் அவரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதியவளின் மன வலிகள்

உலகம் நீரென்றே
உயிரிணைத்து வாழ்ந்திருந்தேன்.
திலகமிட்டுக் கரமிணைத்துக்
காலமெல்லாம் காத்தவரே!
குலவும் அன்பிணைத்து
குதூகலமாய் வாழ்ந்தோமே!
நிலவும் பேரன்பில்
நித்தம் மகிழ்ந்தோமே!

உலவும் உம் நினைவில்
உயிர் உருகித் தவிக்கின்றேன்.
வலமும் இடமும் என
வாழ்ந்தோம் பெருவாழ்வே!
தலங்கள் பல தரிசித்து
தர்மம் வளர்த்தோமே!
கலகமிலா வாழ்வினிலே
கண்ணியமாய் வாழ்ந்தோமே!

என்னையேன் தவிக்கவிட்டு
ஏமாற்றிப் போனீரோ?
அன்பாய்ப் "பொன்னம்மா
என அழைக்கும் வார்த்தையிலே
என்னை மறந்திருந்து
ஏகாந்தம் கண்டேனே!
அன்பான நாயகனே!
அகலாது இருந்தேனே

ஐயா ...............
என் அன்புச் செல்வமே
மெய்யால் எனை இணைத்த
மேன்மைக் குடியினனே
என்னைத் தவிக்க விட்டு
ஏன் சென்றாய் என்னவனே
சொல்ல மொழி இன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடித்துத் தவிக்கின்றேன்
பொல்லாக் காலம் இது
போய் அகன்றாய் எனை விட்டு
எல்லாக் காலத்திலும்
என் அருகே இருந்தவரே
சொல்லாமல் கொள்ளாமல்
சுடலை தனை ஏன் சென்றாய்

ஐயா என் மனதை
அடக்க முடியவில்லை
கல்லாகி என் இதயம்
கனத்து வலிக்கிறது
எல்லாமாக என்னோடு
இணை நின்ற என் புருஷா
நிற்க மனம் இல்லாமல் –என்
நெற்றிப் பொட்டு அழித்ததேன்

பொன்னம்மா பொன்னம்மா என்று
பின் தொடர்ந்து வந்தீரே
செல்லமாய் எனை அணைத்து
சிரிப்பூட்டி மகிழ்வீரே
என்னுமா உன் மனது
இரங்காமல் இருக்கிறது
கண்ணான உன் மனையை
கண்ணீரில் விட்டகன்று

மஞ்சத்து மனைவிதனை
நெஞ்சத்தே நீ பிரிந்து
பந்தங்கள் தான் அறுத்து
முந்தித் தான் போனீரே
எந்தன் உயிர் ஐயாவே
ஏன் சென்றாய் தனிக்க விட்டு
நடுக்காட்டில் நான் இங்கு
தடுமாறிக் கிடக்கின்றேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருக்கமாய் நீ வந்து
உடன் அழைத்துப் போவாயோ
உன் வழியே நான் என்று
உடன் தானே இருந்தேனே
மாப்பிள்ளைக் கந்தையா எனும் –என்
மன்மத வடிவழகே
தோப்பின் பெரு மரம் போல்
சோபித்த என் உயிரே

வேட்டி உடுக்கையிலும் –உன்
வெளித்தோற்ற அழகினிலும்
தோற்று நான் நிற்பேன்–மனம்
தூய்மையுள் என் கணவா
சேற்று வயல் உழுது –நான்
சேர்த்து வைத்த செல்வமெலாம்
காட்டாறு தான் உடைத்து
கரை அடித்துப் போனதுவோ

நேற்று வரை என்னோடு
நின்றிருந்த தலை விருட்சம்
காற்றடித்து சாய்ந்தது போல்
கணம் அகன்றாய் இடை நடுவே

போற்றி மனம் உன்னைப்
புகழ்ந்து கிடக்கிறது –நீ
ஏற்று எனை மனைவியென
இவ் உலகம் காண்பித்தாய்
இன்னுமொரு பிறப்பிருப்பின்
என் உயிரும் உன் அருகே
இருந்து விட வேண்டும் ஐயா
எல்லாமே நானாக ....

உந்தன் நினைவதனில்
உயிர் பிடித்து நிற்கின்றேன்
எந்தன் உயிர் கொள்ள
இவ்விடமே வந்திடுவீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சம் தான் அறுந்து
நினைவற்றுக் கிடக்கின்றேன்
கொஞ்சம் தான் இரங்கி–எனை
கொண்டு செல்லும் உம் இடமே

என்றும் உம் ஆத்மா......
இருக்கட்டும் என்னுடனே
சென்று வா என் உயிரே
சீக்கிரம் நான் வருவேன்

உண்ணும் பொழுதுகளும்
உறங்கும் கணமதுவும்
கனவும் நினைவுகளும்
காட்சியாய்க் கனக்கிறதே!
மண்ணில் நூறாண்டு
வாழ்வோம் என இருந்தோம்.
விண்ணவனும் ஏனோ
விரும்பி அழைத்துவிட்டான்.

சொர்க்கத்தில் வாழுங்கள்,
சுகத்தில் திளைத்திடுங்கள்,
வேளைக்கு சாப்பிடுங்கள்,
நலமாக உறங்குங்கள்.

**ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி**

**உங்கள் நினைவில்**
**உருகியழும்**
**உயிர் மனைவி**
**உங்கள் பொன்னம்மா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பொன்விழா நிகழ்வின் குதூகலிப்பில்


துணைவியின் அரவணைப்பில்















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவுகளில்...







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாசப் பிணைப்பில் பிள்ளைகள்



## பூத்துக் குலுங்கும் புன்னகைப் பூக்கள் (பூட்டப்பிள்ளைகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதல் மைந்தன் கலா கணேசனின் கண்ணீர் வ(லி)ரிகள்

மாணிக்கப் பிள்ளையாரை மனதிருத்தி
காணிக்கை பலசெலுத்தி
கசிந்துருகி
பேணித் தொழுது நிதம்
பேறாகப் பெற்ற என் கணேசன்
முதல் மைந்தனெனக்
கூறுவதைப் பலதடவை
காதோரம் கேட்டுக் களித்திருந்தேன்.

பாவாரம் சூட்டி உங்கள் பாதம்
பணிகின்ற பாக்கியத்தை
தேவாரம் பாடித் தினமெனக்கு
நாவோரம் நல்லதமிழ் வந்து விளையாட
வரமாகி வந்தெனக்கு
வாழ்வு தந்த தந்தையே!
சிரந்தாழ்த்திச் சிந்தையிலே
தினம் போற்றி துதித்திடுவேன்.

அன்போடு அரவணைத்து
அறிவோடு தெளிவூட்டி
பண்போடு வாழவைத்து
பாரினிலே உயரவைத்து
கண்போல எம்மைக்
காத்து வளர்த்தவரே!
மண்பற்று மனிதநேயம்
மறக்காத ஊர் உறவு
நுண்ணறிவு கலைஞானம்
நுட்பங்கள் நுணுக்கங்கள்
பண்ணோடு இசை பாடும்
பட்டறிவுப் பொக்கிசமாய்
எண்ணோடு எழுத்தெல்லாம்
எடுத்தியம்பும் படிக்காத மேதையப்பர்
பண்ணாகக் கதைசொல்லும்
பாங்கினிலே வல்லவராய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்படாவண்ணம் புகலும்
புன்சிரிப்பும்
கண்பட்டுப்போனதோ?
காலம் பறித்ததோ?
அன்போடு வரவேற்று
விருந்தோம்பி உபசரிக்கும்
இன்போடு இல்லறம் இதுவென
வாழ்ந்த காட்டிய வரமே
என்றென்றும் உம் வழி தொடரும்.
எம்கரமே
மீண்டும் உங்கள் பிள்ளைகளாய்
பிறக்கத் தவம் கிடப்போம்.
ஆண்டு நூறை எட்டியிறை
பாதம் நிறைந்தீர் என ஆறுவோமே

உங்கள் தோளிலும் மார்பிலும்
மடியிலும் துயின்ற நினைவுகளும்
உங்கள் பாட்டிலும் கதையிலும்
அன்பிலும் அணைப்பிலும்
அறிவும் பயின்று
திளைத்துச் சுவைத்து இரசித்த
அந்தப் பொழுதுக்காய்
ஏங்கித் துடிக்கின்றோம்.

ஐயா ஐயாவென
உள்ளம் உருகி உங்கள்
நினைவலைகள் காற்றில் கலந்து
கண்ணீராய் வடிகிறது.
அம்மாவும் உம் அன்பில்
உருகியுயிர் சோரும்
துன்பத்தைக் காணும்
துயரம் நெஞ்சடைக்கிறது.
ஐயா நீர் மீண்டும்
வரவேண்டும் வரமாக...

**கண்ணீரோடு**
**கலா கணேசன் குடும்பம்**
**உங்கள் முதல் மைந்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பு மகளின் ஆர்ப்பரிப்பு
## ஐயாவின் .. அந்தக் கடைசி நிமிடம்

ஆந்தை அலறவில்லை
அடிவளவில் ஊளை இல்லை
காகம் கரையவில்லை
கணம் எதுவும் மாறவில்லை

தேகம் குலையவில்லை
தெரு நாயும் குரைக்கவில்லை
ஓலம் எதுவும் இல்லை
ஒப்பாரி ஒன்றும் இல்லை

நேரம் கணக்கென்று –நீ
இழுத்துக் கிடக்கவில்லை
ஓரம் படுத்திருந்து –உயிர்
உறங்கித் தான் கொண்டாய்

ஏழுக்குள் ஒன்றாக
எனை நீர் பெற்றெடுக்க
மாணிக்கப் பிள்ளையார் கோவிலுக்கு
மடிப்பிச்சை தான் பட்டாய்

பிரியத்துக்கு ஒன்றென்று
பிரியசாந்தா எனும் பெயர் இட்டு
அருமருந்தாய் என்னை
அப்படிக் காத்து நின்றாய்

உன் நினைவிழந்து போகையிலும்
நீ எனை மறக்கவில்லை

பனை மரம் கீழ் நில்லாதே
பார்த்து நில் என் மகளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊருக்கு அடித்தடித்து
உடம்பைக் கெடுப்பவளே
யார் பெற்ற பிள்ளையோ
நான் என்ன செய்யட்டும்
விழுந்து நான் கிடக்கிறேன்
ஏன் இந்தப் படும் பாடு –இப்
பிள்ளைக்கு கொடுக்கின்றேன்

யார் பெற்ற பிள்ளையவள்
நல்லா இருக்கவேணும்
நினைவற்ற வேளையிலும்
நீ சொல்லும் வார்த்தை அது

ஐயா .. உன் நினைவில்
அலறுதையா என் இதயம்
மெய்யால் உனை வருத்தி
மேதினியில் வாழ வைத்து
எல்லாமே முடிந்ததென்று
எய்தி விட்டாய் இறை அடியை

பொய்யான காலம் என்று
போகாதோ உன் மறைவு
பக்கத்தில் நான் இருந்து
பாராதோ உன் முகத்தை

செக்கச் சிவந்தவனே
சிந்தை நல் நிறைந்தவனே
சொக்கத் தங்கமென –பெயர்
தக்க வைத்தவனே

முற்றத்து மாமரமும்
முன் நிக்கும் பூவரசும்
பக்கத்து நீள் வேம்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்து நிக்கும் உன் முகத்தை–இப்போ
பக்கத்தே காணாமல்

பரிதவித்து நிறகுதைய்யா
எங்கள் குடுப்பத்து
இமயத்துக் கோபுரமே!
எப்போ இனிக் காண்போம்–உன்
இனிய திரு முகமே!
யாருக்கும் கொடுமைதனை
நினைக்காத உன் மனது
ஊருக்கே உயிர் வாழ்ந்து

ஊரோடே உறங்கி விட்டாய்
காலப் பொக்கிஷமே!
கந்தையா எனும் நல் சரித்திரமே!
காலனே தலை வணங்கும்
கண்ணியவான் என் ஐயா

மீண்டும் பிறப்பெடுப்பின்
மேதினியில் உன் மகளாய்
நானே பிறக்க வேண்டும்
நற் கடன்கள் நான் முடிக்க வேண்டும்.

என்றும் உன் சாந்தி வேண்டி
இறையடியை நாடுகின்றேன்

**ஓம் சாந்தி ..ஓம் சாந்தி.. ஓம் சாந்தி**

**பிரியமுடன் உன் மகள் –பிரியசாந்தா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லறம் செய்த வள்ளல் எம் அப்பப்பா

நான்கு தலைமுறை கடந்த
வரலாற்று மனிதன்...!
எல்லாவகைப் போராட்டங்களையும் கடந்த
தனிப்பெருங்காப்பியம்....!
வெள்ளைக்காரன் முதல்
நுண்ணுயிர் (கொரோனா) காலம் வரை
தலை நிமிர்ந்து நடந்த – எம்
காலத்தின் காவியம்...!

பிள்ளைகளை தன்னுயிராய்
பேணி நிதம் காத்து
பார்புகழ வாழவைத்து
வாழ்ந்தவர் நீங்கள்...!

மருமக்களைத் தன் குஞ்சுகளாய்
ஒரு கூட்டிலே அன்பால்
அரவணைத்தவர் நீங்கள்...!

மனையாளை, உடன் பிறந்தோரை
உற்றார், ஊரவரை கூட்டுறவால் கூட்டி
வாழ்ந்தவர் நீங்கள்..!
பேரப்பிள்ளைகளை பாசக்கரங்கள் கொண்டு
ஆரத்தழுவி
கோபத்தையோ, முகச்சுழிவினையோ
ஒரு கணமும் காட்டிடாது
மலர்ந்த முகத்தோடு அருகிருத்தி அளவளாவும் அன்பானவர்...!

அப்பப்பா
எம்மோடு இருந்த நாட்களில்
எமக்காகச் சொல்லிய
நாட்டுப்புறப் பாடல்கள்
மகாபாரதக் கதைகள், இராமாயண விளக்கங்கள்
தேவாரங்கள், புராணங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்னெறிப் போதனைகள்
உம் வாழ்க்கை அனுபவங்கள்
அத்தனையும் உங்கள்
குரலினில் கேட்டு மகிழ்ந்திருந்தோம்...!

உங்களோடு கொண்டாடிய
பொங்கல்கள், வருடப்பிறப்புக்கள்
சாமத்திய வீடுகள், தேர்த்திருவிழாக்கள்,
விடுமுறை நாட்கள், விரத நாட்கள்
இன்னும் எத்தனை (எத்தனை)
அத்தனையும் உங்கள் குடையின் கீழ்
கொண்டாடிக் கழித்திருந்தோம்.

"எல்லாவற்றிற்கும்
சிவா வரட்டும் எனக் காத்திருப்பீர்
காத்திருந்து காத்திருந்து களைத்ததாலா
சிவனடியைச் சென்றடைந்தீர்?
சிவா அடியைச் சென்றடைந்தீர்.

அம்மா உங்களைக் காண வருகையில்
எப்போது என்னிடம் வருவீர்கள் என்றதுவும்
கைபேசியிலே காதோரம் கதைத்ததுவும்
என்னிடம் விரைவில் வாருங்கள் என்ற ஏக்கமே
எங்களுக்கான உங்கள் துடிப்பதுவும்
எம் உணர்வைக் கொல்கிறது
பூட்டப் பிள்ளைகளுடன் கதைத்த
இனிய நாட்கள் இன்னமும்
செவிப்பறைகளில் ஒலிக்கிறது

அப்பப்பா
நாம் அங்கு வரும் போது
ஓடி வந்து அரவணைத்து
கதை பேசும் நீங்களில்லாத – அந்த
நாளின் பெருவெளியை
நினைக்கவே முடியவில்லை....!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவைத் தேற்றிடும்
உங்களின் ஆறுதல் வருடல்கள்
இனி வரும் காலத்தில் இல்லை
நம்பவே முடியவில்லை.

எங்கள் அப்பப்பா
அவருடய எளிமை
தெளிந்த பேச்சு,
கபடமற்ற புன்னகை,
பக்கச்சார்பற்ற ஆலோசனை
யாவரையும் மதிக்கும் பண்பு
மன்னிக்கும் மனோபாவம்
நிதானம் நிறைந்த அறிவுரை
எல்லோரும் ஏற்கும் படியான முடிவுகள்
அத்தனைக்கும் மேலாய் இத்தனை காலம் கூடி வாழ்ந்த
இல்லற வாழ்க்கை
இதை விட அவர் புகழ் ஏது நாம் சொல்ல...?

இல்லற வாழ்வில் நல்லறம் செய்தவர்
நல்வழியை நல்லபடி தொடர்வது ஒன்றே
நம்மவரின் கடமையாகும்.
அப்பாவுடன் இருந்து ஆசீர்வதியுங்கள்
எம் காலம் சிறக்கவென்று

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

**ஆத்ம சாந்தி வேண்டி**
**சிவாகோணேஸ்,**
**பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு மகனின் மனக் குமுறல்

வாழ்வின் மகத்துவத்தை
வகுத்துத் தந்த என் குருவே!
வையகத்து வாழ்வதனை
வரையறுத்த திரு உருவே!
வாழ்வாங்கு வாழ்ந்திங்கு
வான் அகன்ற வடிவழகே!

பேர் போற்றும் செம்மலதாய்
பெரு விருட்ச தாய் மரமாய்
பார் போற்ற வாழ்ந்தவனே!
பாடையிலே ஏன் போனாய்?

அன்பு மகன் இங்கு
அழுது புலம்புகிறேன் –உன்
அருகில் நான் இல்லா....
அனாதை ஆகிவிட்டேன்

கடைசி நேரத்திலும்
காண உன் முகத்தை
தேடி என் மனது
தேம்பித் தவிக்கிறது

ஊருக்கு வந்து உன்னை
உடன் இருந்து பார்க்கவென்று –என்
உடம்பினைத் தேற்றி வைத்தேன்

யாருக்கு தெரியும் ஐயா–நீ
பார் விட்டு போவாய் என
தேர் சாய்ந்த திருவிழாபோல்
ஊர் உறங்கிக் கிடக்குதையா.
யார் பட்ட கண் அதுவோ
நீ பட்டுத் தான் அகல ..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர் விட்டு நான் வந்து
உனைப் பிரிந்து இருக்கையிலும்
நீ விட்ட கண்ணீரால்
நெஞ்சம் பதறுமையா.

அன்புக்கு இலக்கணமாய் –நற்
பண்போடு வாழ்ந்தவனே! –உன்
அன்புப் பிள்ளைகளை
அழகாய் வளர்த்தவனே!

தந்தைக்கு இலக்கணமாய்
தான் வாழ்ந்த குல விளக்கே!
எந்தை நான் இனிக் காண்பேன்
எந்தன் உயிர் ஐயா ..

நெஞ்சு பொறுக்குதில்லை
நீ சென்ற சேதி கேட்டு
தூர தேசம் நான் இருந்து
துடித்துத் தவிக்கின்றேன்.

ஆண்டுகள் அழிந்தாலும்
அழியா உன் நினைவு
மீண்டும் பிறப்பெடுத்து
மேதினியில் வலம் வருவாய்.

உன் ஆத்மா சாந்தி வேண்டி
ஆண்டவனை நாடுகின்றேன்.

**ஓம் சாந்தி... ஓம் சாந்தி.... ஓம் சாந்தி**

**அன்புமகன் –கிருபா கந்தையா –கனடா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிருருகும் ஆசை மகன் – கருணா

என் நெஞ்சம் கனக்கிறது– உங்கள்
நினைவுகள் சுமந்தபடி! என் தந்தையின்
அருகில் சொநதங்கள், உறவுகள், ஊரவர்
அயலவர் என பலரும் ஒன்று கூடி நின்ற
வேளை நான் மட்டும் பாவியானேன்
தூர தேசத்தில் நின்று
என் ஐயாவின் மூச்சு எனக்காக காத்திருக்கும்
என்ற அற்ப ஆசையில் இருந்தேன் – இருப்பினும்
இறுதி வரை நான் உயிருடன் பார்க்கும்
பாக்கியத்தை இழந்துவிட்டேன் –என் ஐயாவின்
மூச்சு நின்றுவிட்டது என நான் கேட்டதும்
எனக்கு உயிர் கொடுத்தவர் இன்று....?
நான் இனி ஐயாவை எங்கே பார்ப்பது ! எனது அம்மா
சொன்னார் "உனது ஐயா கஸ்டமுமில்லாது சத்தமில்லாமல்
எந்த அவதியுமில்லாது இறைவனடி சேர்ந்தார்.
அவர் சாமி என்றார். நான் என் தந்தையுடன்
வாழ்ந்த நாட்கள் சிறிது காலம். இருப்பினும் அவரை
எண்ணி ஏங்கிய நாட்கள் அதிகம். "அப்பப்பாவை எமக்கு
காட்டுங்கள் என எனது பிள்ளைகள்
தினமும் கேட்பார்கள் நானும் "மிக
விரைவில் காட்டுகின்றேன் என்றேன்.
இனி யாரை நான் காட்டுவேன்?
எனது பிள்ளைகள் அப்பப்பாவை, சொந்தங்கள்,
உறவுகள் எம் தேசத்தை, எம் மொழியை,
எமது கலாசாரத்தைத் தொலைத்த பிள்ளைகளுடன்
நான் சாமிக்கு மகானாகப் பிறந்த பெருமையுடன்
நினைவுகளை சுமந்தபடி என்றும்
சொந்த பந்தங்களுக்காய் ஏங்கி நிற்கும்!

**ஆசை மகன்**
**கருணா குடும்பம்**
**(பிரான்ஸ்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசை மகன் –குகாவின் நெஞ்சக் கன வரிகள்..!!!

நெஞ்சு பொறுக்கவில்லை –ஐயா
நெஞ்சு பொறுக்கவில்லை
நீ செற்ற செய்தி உற்று –மனம்
பிஞ்சு கிடக்குதையா ..

குஞ்சுகள் தான் வாழ –நல்
குல விளக்காய் நீ ஒளிர்ந்து
பஞ்சாய்ப் பறந்திங்கு
பார் வீட்டு நீ சென்றாய்

ஒன்றா.. இரண்டிங்கு
உனைப் பற்றி நான் எண்ண
கண்கள் பனிக்கிறது –மனம்
கனத்துத் துடிக்கிறது

திங்கள் வான் அகன்று
திசை மாறிச் சென்றது போல்
உங்கள் நினைவின்றி
ஒரு பொழுதும் நகராது

எங்கள் குல விளக்கே
ஏன் அணைந்தாய் இடை நடுவே
பொங்கல் முடிந்து
புது வருடம் வரும் என்று
நம்பி நாம் இருக்கையிலே
நம்பிக்கை ஏன் இழந்தாய் ?

விம்மி என் மனது
வேதனையில் துடிக்கிறது
எண்ணி எண்ணி மாளாமல்
ஏங்கித் தவிக்கிறது

காலை நான் வந்து–உன்
கடன்கள் முடித்து விட்டு
வேலைக்கு போய் வந்து
வீட்டுக்குள் நான் வரவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரத்தைப் பிடித்து வைத்து
நின்றிருந்தாய் எனக்காக
மூச்சை அடக்கி வைத்து
முழு நிறைவாய் நீ போவதற்கு

கடைசி நிமிடத்திலும் –நீ
கண்ணியம் தவறவில்லை
புண்ணியம் செய்தவர் நாம்–உன்
புதல்வராய்ப் பிறந்ததிற்கு

அன்பையே எமக்கு ஊட்டி
ஆளாக்கி விட்டுவிட்டு
பண்பைத் தான் புகட்டி
பார் போற்ற வைத்து விட்டு
உந்தன் கடன் முடித்து
ஓய்ந்து தான் போனாயே ...

எந்தன் மனம் இங்கு
இறுகிக் கனக்குதையா
உந்தன் உயிர்ப் பிரிவில்
உருகி வலிக்குதையா

எங்கள் உயர்வுக்காய்
உயிர் உருக்கி உழைத்தவனே !
உயர்ந்து நாம் வருகையிலே
உயிர் மாய்த்து ஏன் மறைந்தாய் ?

சென்று வா எந்தன் ஐயா
சொர்க்கத்து நாயகனே !
அங்கும் நீ இருந்து
காத்தருள்வாய் எம்மவரை.

உந்தன் ஆத்ம சந்திக்காய்
உருகுகிறேன் இறை வேண்டி

**ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி**

**ஆசை மகன் – குகா .!!!!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடைக்குட்டி மகன் பிரபாவின் கண்ணீர் வரிகள்

ஐயா ..!!!!!!!!!!

காலையில் கண் விழித்து
மாலை நீ தூங்கும் வரை
வேளைக்கு நூறு தரம்
படலையைப் பார்த்து நிற்பாய்

"பொன்னம்மா இவன் எங்கே?
போனவனைக் காணோமே!
என்னம்மா நீர் பார்த்துக் கொண்டு இருக்கிறாய்?
இவனைத் தேடாமல்...

செல்லமாய் திட்டி விட்டு
தெருவோரம் காத்து நிற்பாய்.

என் ஒவ்வொரு அசைவில்
உன்னையே நான் தொடர்ந்தேன்.
கடைக்குட்டிப் பிள்ளை என்று
கண்ணியமாய் தான் வளர்த்தாய்.

என்ன தவம் நான் செய்தேன்
உன் மகனாய் நான் வரவே
புண்ணியம் செய்தவன் நான் –உன்
புதல்வனாய் நான் பிறக்க

எத்தனையோ இழப்பிருந்தும்
ஏற்க இயலவில்லை
எந்தன் உயிர் ஐயாவே
உந்தனது உயிர்ப் பிரிவை

ஊர் வளவை உழுது விடு
கோயில் தேருக்கு அன்னதானம்
நூறு பேருக்குச் சொல்ல வேணும்
பேருக்கு வாழாமல் –நல்
பெருமையுடன் வாழ வேண்டும்
கட்டையில் போகையிலும்
கண்ணியமாய்ப் போக வேணும்
சொல்லிச் சொல்லி எனை வளர்த்து–இப்போ
சொர்க்கம் சென்று விட்டாய்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன் இந்த அவசரமோ?
எமை விட்டு நீ அகல
இருக்கின்ற கணம் எல்லாம்
எம்மையே நினைத்திருந்தாய்.
படுத்திருந்த பொழுதிலும் நீ
பாசத்தையே நீ தந்தாய்

கை உடைந்து நான் கிடக்க -நீ
மெய் உடைந்து தான் கிடந்தாய்.
இடுக்கண் வரு முன்னே
ஏந்தி எமைக் காத்து நின்றாய்
முறிப்புக் குளம் உடைத்து நீர் பாய-எனை
முதுகில் நீ சுமந்து சென்றாய்

அன்புக் குல உருவே!
அழகுத் திரு விளக்கே!
பண்பால் நிறைந்தவனே!
பணிவின் தலை மகனே!
எம்பால் எண்ணாமல்
ஏன் சென்றாய் இடை நடுவே?

வெந்து மனம் இங்கு
வேதனையில் தவிக்கிறது
உந்தன் பிரிவதனில்
உயிர் உறைந்து கிடக்கிறது

பிறப்பொன்று உனக்கிருப்பின் -மீண்டும்
பிறக்க வேண்டும் உன் மகனாய்
இருக்கின்ற பொழுதெல்லாம்
இன்பமாய் நான் வாழ

ஆண்டுகள் அழிந்தாலும்
அழியா உன் நினைவு-நான்
மாண்டு போகும் வரை
மனதோடு தான் நிற்கும்.

ஐயா.... உன் சாந்தி வேண்டி
அரற்றுகின்றேன் தாழ் பணிந்து

**ஓம் சாந்தி ..ஓம் சாந்தி.. ஓம் சாந்தி**

**கடைசி மகன் – பிரபா கந்தையா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடன்பிறந்தோர் உயிர்த்துடிப்பில்

முத்துக்கு முத்தாக
சொத்துக்கு சொத்தாக
பத்துப்பேர் கூடிவந்தோம்
பலர் போற்ற மகிழ்ந்திருந்தோம்

ஒண்ணுக்குள் ஒண்ணாக
கண்ணுக்குள் கண்ணாக
அன்பாலே இணைந்திருந்தோம்.
ஆருயிராய் வாழ்ந்துவந்தோம்.

அண்ணலே உன் வார்த்தைக்கு
அனைவருமே கட்டுண்டோம்.
மண்ணிதிலே மாண்புடனே
மதிப்போடு தலை நிமிர்ந்தோம்.

பண்போடு வாழும்
பக்குவங்கள் சொன்னவரே!
எண்ணத்தில் நேர்மை உண்மை
என்றென்றும் நீதியுடன்

வாழும் வழிகாட்டி
வாழ்வாங்கு வாழ்ந்தவரே!
நாளும் பொழுதும்
நற்பாசம் பொழிந்தவரே!

ஆளும் தலைமகனாய்
அன்பாலே வளர்த்தவரே!
ஊழின் வலியிதனை
மாற்றிடத்தான் முடிந்திடுமா?
உற்றார் உறவுகளை
உள்ளத்தால் ஒன்றிணைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாச உடன்பிறப்புகள்



அமரர் செல்லம்
அன்னப்பிள்ளை



இரகுநாதர் இராசமணி



சுப்பிரமணியம்
பராசக்தி



அமரர் கைலாயப்பிள்ளை
நாகம்மா



அமரர் குட்டிப்பிள்ளை
கந்தையா




குட்டிப்பிள்ளை
பரமலிங்கம்



அமரர் குட்டிப்பிள்ளை
இராமநாதர்




அமரர் குட்டிப்பிள்ளை
மயில்வாகனம்



அமரர் குட்டிப்பிள்ளை
நாகலிங்கம்



நாகேந்திரம்
பொன்னம்மா



அமரர் குட்டிப்பிள்ளை
தருமலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றிடப் பல்லறிவுரைகள்
காலமெல்லாம் கனிவாக்கி

பற்றோடு எம்மில்
பாசம்பொழிந்தவரே!
நேற்றோடு யாவும்
நினைவிழந்து போய்விடுமா?

ஊற்றான நல்லுணர்வோடு
உடன் பிறந்த பரிவோடு
காற்றோடு கலந்தீரோ?
கண்ணீரோடு தேடுகின்றோம்.

தேற்றமுடியவில்லை
எம்பாச உடன்பிறப்பே!
சாற்றமுடியவில்லை –எம்
சந்ததியின் சத்தியனே!

கூற்றுவனின் கொடுமையிது
மாற்றத்தான் முடிந்திடுமா?
நேற்றிருந்த எம் நேசம்
நெஞ்சத்தில் நினைவலையாய்

காற்றில் கலந்த எங்கள்
கண்ணியனைத் துதித்திருப்போம்.
காலமெல்லாம் மறக்காது.

**பாசப் பிரிவில்**
**பதறும் உடன்பிறப்புக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்கள் மனக் கனப்பு ... !!!!!!

அன்பின் திரு உருவே!
அழகின் பெரு நிலவே!
அறிவின் சிகரம் நீ
அணைப்பின் உயரம் நீ

வாழ்வின் தன்மைதனை
வரையறுத்து எமக்களித்து
வேரும் நல் விழுதுமதாய்
ஊர் போற்ற வாழ்ந்தவனே!

மாமா என்று உம்மை
மனமாரத் தான் அழைக்க
தீராக் கவலைகளும்
தீரும் ஐயா உம் பரிவில்

ஆறா வேதனையில்
அழுது வடிக்கின்றோம்.
நீறாகி நெருப்புக்குள்
நீர் எரிந்து போனதனால்

ஊனாய் உருக்கி உனை
ஒளி தந்த பெரு விளக்கே!
ஏனோ எமை எண்ணாமல்
எமன் இடையே ஏன் சென்றாய்?

மாமா உன் நினைவில்
மருமகள் நாம் இங்கு
மனத்தால் நலிவுற்று
மயக்கிக் கிடக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேச அணைப்பில் மருமக்கள்










## வைரவிழா நிகழ்வில்...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறா எம் மனது
மாமா உன் நினைவே
கூராய் வேல் பாய்ந்து
குற்றிய வேதனை போல்
ஆறா வடுவாகி –எம்
ஆயுள் வரை இருக்குமைய்யா.

தேனாய் இனிப்பவனே!
தேமதுரத் தமிழ் வடிவே!
ஊரார் போற்றி நிற்கும்!
உன்னத உயர் திருவே!

வாழ்வாங்கு வாழ்ந்து இங்கு
வையகம் தான் அகன்று
சொர்க்கம் தான் சென்று
சுடர் ஒளியாய்த் திகழ்பவனே!

என்றும் உன் ஆத்மா சாந்தி பெற
இறைவனடி வேண்டுகிறோம்

**ஓம் சாந்தி.. ஓம் சாந்தி .. ஓம் சாந்தி**

**பாசமிகு மருமக்கள் ..!!!!!!**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதற் பேரனின் இதயவலி..!!!!

ஐயா...(♥ ..என் ஆத்மா..♥ )
என் வாழ்வின் எல்லாமாக
இருந்தவன் நீ
வாழ்வின் மகத்துவத்தை
வரையறுத்த செம்மல் நீ
எவருக்குமே புரியாது.. எனக்கும் உனக்குமான உறவு
கை வீசக் கற்றுத் தந்த நாள் முதல்.
கால மாற்றத்துக்கு ஏற்ப என்னை வழிகாட்டி வந்த
காந்தி மகான்..

உலக நடப்போடு –நான்
நிலை இழக்கும் போதெல்லாம்
எனக்கு நடை
பயிற்றுவித்(த)தாய்
முதுமை அடைந்தாய்–என்
முன்னேயே விழுந்து
படுக்கையில் கிடந்தாய்.
ஒரே ஆண்டில் உயிர் பிரிந்தாய்.

உந்தன் இழப்பு ஒரு வயோதிபத்தின் மறைவு
தவிர்க்க முடியாத தருணம் யாவர்க்கும்– ஆனால்
உனக்கும் எனக்கும் தான் தெரியும்–உன் இழப்பின் வலி!!!
உன்னையே பார்த்து
உன்னையே தொடர்ந்து
என்னை மறந்து உனக்குள்ளே
கிடந்தேன்.

நீ இறக்கவில்லை என்பதே
என் இன்றைய நினைவு.
என்னோடு எப்போதும் வாழும் உன் மனிதம்.
யாவருக்கும் நீ வயோதிபத்தின்
இறப்பு..
எனக்குள் நீ எப்போதும் –ஓர்
புதுப் பிறப்பு..!!!

**பேரன் –சுரேஷ் தர்மா –கனடா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இல்லறச் சோலையில் மலரும் மொட்டுக்கள்...( பேரப்பிள்ளைகள்)














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லறச் சோலையில் மலரும் மொட்டுக்கள்.... ( பேரப்பிள்ளைகள்)










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேமதுர கீதஞான ஒளியே!

என்னகத்தே உயிர்த்த
என்னுயிர் ஐயா – நீர்
உறங்கிடவில்லை...!

சிரித்திருந்த அந்த
பௌர்ணமி நிலவினிலே...
தைப்பூச நன்னாளினிலே...
நிலா வண்ணத்து
நிர்மல அழகோனே!
நெடுந்தீவின் உன்னத மைந்தன்
உண்மையின் உரைகல் இவரெனவே
உத்தமர் பேர்தனை உரைத்தே
உருத்திரபுரமே ஊமையாய்ப் போனதையா

மாணிக்கப்பிள்ளையாரின்
மணித்தவம் என் பிள்ளையென
தன்னிலை மறந்த போதும்
தலைதொட்டுத் தந்தீரய்யா
அருள்வாக்கு

அன்பாய் அருகமர்த்தி
அறிவார்ந்த அருங்கதைகள்
அழகழகாய் அத்தனையும்
கருத்தோடு கண்ணியமாய்
கவின வடிவில் சொல்வீரய்யா!
மாணிக்கமாய் நான் பெற்ற – எந்தன்
மாமேதை மாணிக்கமே இவரென்று
சொக்கி நின்ற சௌக்கியத்தை
இனி எப்போ காண்பேனய்யா...?

அன்பனே அன்பழகனே
அறத்தோனே அறத்தினாள்வோனே
தேவார திருப்பதிக நாயகனே
சொல்லாடற திறனோனே
ஆத்மார்த்த அருங்காட்சியமே!
ஆண்டவன் சந்நிதியில்
அருளாசி பெற்றிடுவீர்...!
நித்திய புன்னகை ஆசி
நாம் பெற்றிட வேண்டுமய்யா!

பேத்தி – இ. யதார்த்திகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேதலிக்கும் பேரர் நாம்.......

**********************************

அப்பனே சிவமே என்பீர்
ஐயனைத் தொழுது நின்றீர்

சொற்களில் கவனம் கொண்டீர்
சொந்தமே உயிராய் நின்றீர்

எத்தனை செய்தீர் ஐயா
எண்ணிட முடியவில்லை

அத்தனை நெஞ்சத்துள்ளும்
அன்பதாய் நிறைந்து நின்று

இத்தனை இன்பம் தந்து
இவ்வையம் மறைந்ததென்ன?

பக்தனாய் மாறி நின்றீர்
பக்குவம் பலதும் சொன்னீர்

தத்துவ ஞானியாகி
தன்னறிவிழந்த பின்பும்

எத்தனை உரைத்தீர் ஐயா!
என்றுமே அழியாதையா

முத்தெனத் தமிழுரைத்து
முதுமொழி பலதும் சொல்லி

நித்தமும் என் பெயரை
நினைவது இழந்த பின்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளமே மகிழும்வண்ணம்
உச்சரித்த உங்கள் நாவை

எத்தனை பிறப்பினிலும்
எப்படி மறப்பேன் ஐயா

பற்றிடக் கரங்கள் நானும்
பார்த்துமே புன்னகைப்பீர்

பித்தென ஆகிப்போனேன்
பிள்ளையாய் நானே ஆவேன்

முத்தெனக் கிடைத்த சொத்து
முகவரி தொலைத்ததேனா

சித்தமே கலங்குதையா
சிறு சிறு நெருடலாலே

சத்தென ஊட்டி ஊட்டி
சளைத்திடாவண்ணம் நின்ற

உத்தமியாள் உங்கள்
உயிர்த்துணையினாளை

எப்படி பிரிந்து சென்றீர்?
ஏற்றிட முடியவில்லை

சந்தனப் பொட்டும்
சலிப்பிலா முகமும்

எந்த நேரமும்
எழில் புன்னகையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்தமாய் பாசத்தோடு
பழகிய அப்பப்பாவை

இந்தப் பொழுதில்
இழந்தே தவிக்கின்றோம்.

வந்தனம் வணக்கமென்று
வந்தோரை வரவேற்றும்

சந்தமாய் பாடல்பாடி
சங்கதி பலவும் சொல்லி

இங்கித வாழ்விலே – நாமும்
இணைந்துதான் இருந்தோமே

எங்கிருந்து வந்த காலன்
எடுத்தனன் உயிரையேனோ?

தங்க(ம்) உமக்கிங்கு
தனியிடம் இல்லையென்றா

தந்தவன் எடுத்தான்
தாளா வலி கொடுத்தான்.

வந்தவர் போவது
விதியென்றாலும்

வாழ்வைத் தந்தவர்
வீழ்வது வலியன்றோ?...

**பேரப்பிள்ளைகள்**
**யதன் , நிதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Memories of my dearest grandfather

Appapa was a strong, smart and caring man; he never liked to be the center of attention. In life and now in death, he wouldn't want us to focus on him. He wouldn't want us to mourn his death, but instead remember on the happiness in our lives. He would want us to appreciate each other and our future.

A man as humble and loving as my Appapa will always be remembered by those of us who knew him and loved him. Although we will miss his smile, his charming advice and his love, we take consolation in the good memories we made with him.

I remember when I was a little boy in 2010 visiting Appapa and Apamma. Appapa would help us make food, go on walks and also had a schedule. When I went to sri lanka for the first time perriappa had a farm where my Appapa and apamma lived. It was my favorite place to be so everyday I would get on my motorcycle and ride it there. Appapa would yell at me saying the weather is +30 and to come inside and go after 6pm. I remember I never listened and he would come after me and make sure Im inside cause he knew what the heat can do to me. He always wanted to keep me safe.

Appapa and Apamma will always call and talk to me. Its good to hear my Appapa voice cause has so funny. I used to record him talk so I could listen to his jokes as a kid cause he gave me joy. When I talked to him, Appapa I was shocked to hear him reply in English as



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

there were not alot of people that did speak English while I was learning to Tamil . I was even more shocked to learn he doesn't just speak Tamil and English, he speaks multiple languages. I always told him I will come visit him and I wish I came to see him one more time.

A talented man that had many skills, supported his community and family. I can see that my father got his fun loving spirit from him. He loved being a father and a grandparent.

I will always miss you. But I have so many wonderful memories to hang on to. You were a role model, and a friend. The ring you gave my father in 2016 that was passed down to me will always be cherished. Your guidance and love will carry me through to the end of my days. I love you Appapa, I miss you a lot

**Malatavan Vigneswaran,**
**Thushany**
**(Canada)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறவுகளின் சங்கமம்












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரர் , பூட்டர்களின் மனத்தவிப்பு

சின்னக் கை பிடித்து
சிங்காரம் தான் பழக்கி
அன்னம் தான் ஊட்டி
அன்போடு அரவணைத்து

பண்பைத் தான் புகட்டி
பார் போற்ற வாழ வைத்து
கண்ணை இமை காப்பது போல்
காத்திருந்தீர் எம் இடையே

வண்ண வண்ண வடிவழகில்
வாயார எமை வாழ்த்தி
சொல்லும் தமிழ் அழகில்
தூய்மை தான் நிறைந்து
எண்ணம் எலாம் எம் நினைவில்
ஏங்கி நின்றவனே –இப்போ
எங்கு சென்றாய் இடை நடுவில்
எமை ஏங்க நீ வைத்து விட்டு

சொல்ல மொழி ஏதும் இன்றி
துவண்டு கிடக்கின்றோம்
அன்னம் தண்ணி அற்று
ஆவி துடிக்கின்றோம்

எண்ணி எண்ணி எம் மனது
இறுகித் தவிக்கிறது
புண்ணியவான் உம் நினைவால் – மனம்
புழுங்கிக் கனக்கிறது.

அகரம் தான் எழுதி
அன்பைத் தான் பழக்கி
சிகரம் தான் உயர்த்தி
தேசம் போற்ற வைத்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னையே சுற்றி நின்றோம்
உன் அருகில் நடை பயின்றோம்
உன் அன்பு அரவணைப்பில்
உயிர் உருகித் தான் இருந்தோம்
தடக்கி நீ விழுந்து
படுக்கையில் கிடக்கையிலும்
பக்கத்தில் தான் இருந்தோம்

இருக்க மனம் இன்றி
ஏன் சென்றாய் எமை விட்டு -என்
குஞ்சுகள் என்று எமை -உன்
கூட்டுக்குள் வைத்திருந்தாய் -இப்போ
நெஞ்சைத் திணற வைத்து
நீ சென்ற காரணம் ஏன்?

அன்பையே ஊட்டி எமை
ஆளாக்கி வைத்து விட்டு
கடமைகள் தான் முடித்து
காலனிடன் சென்றாயே!

விம்மி மனம் வெடித்திங்கு
வேதனையில் புலம்புகிறோம்-எமை
எண்ணி மீண்டும் நீர்
இவ்விடமே வந்துவிடும்

உங்கள் வரவுக்காய்
இறை வேண்டி நிற்கின்றோம்.

**ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி**

**பேரர்கள், பூட்டர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூட்டா! உம் நினைவோடு பொழுதெல்லாம் கலந்துள்ளோம்.....

கூட்டாக நாமிருக்க
கூடவரமாட்டீரோ?

காட்டாறு வெள்ளம் போல்
கண்ணீரே வருகிறது.

பாட்டாலே எமக்கெல்லாம்
பலகதைகள் சொன்னவரே!

மூட்டாத தீயினிலே
மூழ்கித் தவிக்கின்றோம்.

பூட்டாவே புன்முகத்தை
காட்டாயோ ஒருதரமே...

**புன்னகை தேடும் பூட்டப்பிள்ளைகள்**

**வெறும் பெருமைக்காக
எதையுமே செய்யாதே
உன் மனநிறைவுக்காக
உனக்கு பிடித்ததை
பெருமையோடு செய்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரமருள்ந்த வாழ்வு

வயல் விளைவிக்கும் தண்ணீர்த்தாய் இரணைமடு
கயல் விளையாட வாய்க்கால் வழி நீரோடு
பச்சையம் பரவிக்கிடக்கும் கிளிநொச்சி
நிச்சயம் உழைப்பால் மனங்களில் மகிழ்ச்சி
அயல் விருந்தோம்பும் உருத்திரபுரம்
அன்புசேர் அருமையாளர்கள் வாழும் வரம்
பண்பாளர் பசும்தீவின் வேராளர்
கண்பார்வையில் கருணை கொண்ட பேராளர்
வாழ்வியல் வீணையதை கானமுடன் மீட்டியவர்
வாலிபனாய் உருத்திரபுரத்தில் முதல் தாலி பூட்டியவர்
வளையல்க் கைபிடித்த முதல் மாப்பிள்ளை கந்தையர்
கலைகள் யாவும் கற்ற பிள்ளைகளின் தந்தையர்
கருத்துக்களும் களங்களும் கண்ட வித்தகம்
கனிவுப் பேச்சும் கலகல சிரிப்பும் கொண்ட புத்தகம்
எல்லோருக்கும் உகந்தளித்த அன்புக் கரம்
எல்லையில் நூற்றாண்டை எட்டி வாழ்ந்த வரம்
தொல்லையில்லாப் பிறவி முடித்து
வல்லசிவன் சேவடி தொட்ட இவர்
ஆன்மா அமைதியாகட்டும்.

**பிரியமுடன்**
**அ.பிரியன்**
**(சுவிஸ்)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருத்திரபுரத்தின் மூத்த குடிமகனார் அமரர் குட்டிப்பிள்ளை கந்தையா.

**"தக்கார் தகவிலர் என்பது அவரவர்**
**எச்சத்தால் காணப்படும் "** **(கு.114)**

உலக வாழ்வியல் மெய்யியல் தந்த வள்ளுவனார் திருக்குறளின் நடுவு நிலைமை (அதாவது எல்லோரிடத்தும் ஒப்ப நடக்கும் சமநிலை) அதிகாரத்தின் வாயிலாக இக்குறளை வெளிப்படுத்துவார். அமரர் குட்டிப்பிள்ளை கந்தையா அவர்கள் தமது 98ஆண்டுகால உலக வாழ்வில் 65ஆண்டுகள் இந்த மண்ணின் மைந்தராக, வள்ளுவன் தந்த இவ்வதிகாரத்தின் இலக்கணமாய் வாழ்ந்த மாமனிதர். இவரை எனது 14ஆவது அகவையிலிருந்து அறிந்தவன். ஒருவர் நடுநிலையாளரா? இல்லையா? என்பது அவர் வைத்துச் செல்கின்ற எச்சமெனக் குறிக்கப்படும் புகழ், பிள்ளைகள், பழி, பொருள் போன்றவற்றினால் மட்டுமே சான்று காட்டப்படுகின்றன. இவரிடம் பழிகளும் இல்லை, பொருளும் இல்லை. அவர் விட்டுச் சென்றவை மனைவி மக்களும், புகழும்தான். அன்னாரின் இறுதி ஊர்வலத்திலே உலகினை அச்சுறுத்தி ஆட்டிகொண்டு இருக்கும் கொரோனா (கோவிட்–19) நடுவிலும் ஆயிரக் கணக்கானவர்கள் கலந்துகொண்டு அவருக்கு இறுதி மதிப்புச் செய்து(அஞ்சலி) பிரியாவிடை கொடுத்ததானது அவரது நடுநிலைப் பண்பை, பெருமையை சான்று பகர்வதாய் உள்ளது. புகழ் என்ற அதிகாரத்தில்

**வசையென்ப வைத்தார்க் கெல்லாம் இசையென்னும்**
**எச்சம் பெறா விடின்** **(கு.238)** என்பார் வள்ளுவனார்.

உலகில் பிறந்த ஒவ்வொருவரும் இசை என்று கூறப்படுகின்ற புகழைப் பெற்றவர்களாக அதை எச்சமாக, வைப்பாக இட்டுச் செல்லவேண்டும், இல்லை என்றால் அவர்கள் ஏனையோரின் தூற்றலுக்கு ஆளாவார்கள் என்பதே இதன் பொருளாகும்.

அமரர் அவர்கள் எப்பொழுதும் மதியுரைஞராக, நடுநிலை காப்பவராக, உடலால் மற்றவர்களுக்கு உதவுகின்றவராக, காணாது காணாதென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவிற்காய் நாயாக அலைபவர் போல் இல்லாது, போதும் என்ற மனத்தோடு பொன்மனச் செம்மலாக, தன்னலமில்லா வாழ்வாக வாழ்ந்து காட்டியவர். இவருக்கு அரசால் வழங்கப்பட்ட காணியைத் தவிர வேறொரு காணித் துண்டும் கிடையாது. சட்டமுரணாக அத்துமிறி காடுவெட்டிக் காணி பிடிக்காதவர்கள் கிளிநொச்சி கரைச்சி பகுதியில் இவரைத்தவிர வேறொருவர் இருக்கமாட்டாரென நினைக்கின்றேன். இவர் மட்டுமல்ல இவரின் பிள்ளைகள் கூட அந்த வழிச்செல்ல விடவில்லை (இது ஒரு எடுத்துக் காட்டு மட்டுமே). பிள்ளைகளும் அதில் நாட்டம் செலுத்தவில்லை. இப்படியாக மனிதம் பேணுகின்ற, யாருக்கும் இடைஞ்சல் இல்லாத மனிதர்களை இன்று காண்பது அரிதிலும் அரிதே. இவரின் பிள்ளைகளும் "தந்தை எவ்வழி மைந்தர் அவ்வழி என வாழ்கின்றனர்.

அமரரவர்கள் தன்னை முழுமையாய் வேளாண்மையிலேயே ஈடுபடுத்தி அதன் மூலம் கிடைக்கும் வரவைக் கொண்டே தம்வாழ்வை ஓட்டியவர். "உழுதவன் கணக்குப் பார்த்தால் உழவுக் கூலியும் மிஞ்சாது என்பது சொல்வழக்காய் இருந்தாலும் அதுதான் பெரும்பான்மையான வேளாண்மை செய்வோரின் வாழ்வாய் உள்ளது. அவர்கள் என்றும் சோர்ந்து போவதில்லை. அவர்கள் உடற்பலமும், உளவளமும் உள்ளவர்களாகவே வாழ்வை இழுத்துச் செல்கின்றனர். "ஒருபிடி சோற்றில் உலக ஒற்றுமை கண்டிடு உழைப்பால் அதை உலகிற்கு ஈந்திடு என ஈய்பவராக வாழ்ந்து காட்டியவர் அமரர் திரு.குட்டிப்பிள்ளை கந்தையா அவர்கள்.

**வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி**
**மிச்சில் மிசைவான் புலம்** **(கு.85)** என்பார்

பெருநாவலர். விருந்தாக வருவோரை வரவேற்று அவர்களுக்கு வயிறார உண்டி கொடுத்து, அவர்கள் உண்டபின் மிஞ்சும் உணவைத் தாமுண்டு வாழும் உழவன் தன் விதைப்புக்கென வைத்திருக்கும் விதைநெல்லையே விருந்திற்காய் பயன்படுத்துகின்ற நிலையை இவரிடம் கண்டவன் நானீ. அதாவது தன்தேவையை விட விருந்தோம்பல் முதன்மையானது என்பதே ஒரு உழவனின் வாழ்வின் வரைவிலக்கணமாய் கந்தையா பொன்னம்மா இணையர்கள் போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலரின் செயற்பாடுகளை பட்டறிவாகக் கொண்டுதான் திருவள்ளுவப் பெருந்தகை விருந்தோம்பல் அதிகாரத்தை யாத்து இருக்கிறார் என்று கூறிடினும் அது மிகையாகாது. இவர்கள் திருக்குறள் படித்தார்களோ தெரியவில்லை. ஆனால் நம் முன்னோரின் வாழ்வு அற, அறிவு சார்ந்ததாகவே இருந்திருக்கிறது என்பதற்கு மாற்றுக் கருத்திற்கோ, ஐயப்பாட்டிற்கோ இடமில்லை. 2500ஆண்டுகளுக்கு முன்னரே இருந்த பட்டறிவின், தேரறிவின் தொகுப்பே திருக்குறளாகும். மரபுவழியாக மரபணுவாயிலாக இன்று வரை இழுத்துவரப்பட்ட பண்பும் பண்பாடுமாய் இருக்கிறது. குறிப்பாக தீவுப்பகுதி மக்களிடம் விருந்தோம்பல் பண்பு செறிந்து காணப்படுவதாக பலரும் கூறக்கேட்டு இருக்கின்றேன்.

நல்ல மனைவி, நல்ல பிள்ளைகள், நல்ல குடும்பம் தெய்வீகம் என்பதும், பல்கலைக் கழகம் என்பதும் அமரர் அவர்களின் இல்லற மேன்மையை மேம்படுத்துவதாய் உள்ளது.

**மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்**
**நன்கலம் நன்மக்கட் பேறு (கு.60)**

ஒருவரின் வாழ்வில் அவரின் மனைவியின் பெருமை(அவளின் இல்லறம் நோக்கிய செயற்பாடுகள்) அவனுக்கு எந்நாளும் அவனது திருமணநாளில் பெற்ற மகிழ்ச்சிக்கு ஈடானதாய் இருக்கும் என்றும், அதற்கு அணிகலமாய் இருப்பது ஒழுக்கசீலரான நன்மக்கள் கிடைக்கப் பெற்றதென்றும் கூறுவார். இதை நாம் அமரரின் வாழ்வின் பட்டறிவாய்ப் பெற்றுள்ளோம் எனக் கூறிடின் அது வெறும் புகழ்ச்சியல்ல.

**மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்**
**வளத்தக்காள் வாழ்க்கைத் துணை (கு.51)**

நற்குண நற்செயல் உடையவர்களாய் கணவன் நிலைக்குத் தக்க அளவில் குடும்பத்தை வழி நடத்துகின்றவளே நல்ல மனைவியாய் இருக்க முடியும். இதைத்தான் "மனைவி அமைவதெல்லம் இயற்கை(இறைவன்) கொடுத்த வரம் என்பது ஒருதிரைப்பட பாடலடி. இதன் சாரமாய் இவர்கள் வாழும்போதும், அமரர் உடல் தளர்வுற்ற நிலையிலும் கண் துஞ்சாது, கண்ணை இமைகாப்பது போலவும், சத்தியவான் தொழுநோய்க்கு ஆளானபோது அவனைத் தலைமேல் சுமந்த சாவித்திரியைப் போல் தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவரைப் பேணிப் பாதுகாத்து அவருக்கான பணிவிடைசெய்து அவரை ஆற்றித்தேற்றி தன் தள்ளாத நிலையிலும் 50 வயதுக்காரி போல் "கற்பென்னும் திண்மை திரட்டி அன்னை அவர்கள் செயற்பட்டதானது எமக்கெல்லாம் பெருமை தருகிறது. "வாழுகின்ற மக்களுக்கு வாழ்ந்தவர்கள் பாடமடி என்பதாய் இவ்விணையர் வாழ்ந்து காட்டி உள்ளார்கள்.

தொன்று தொட்டுத் தமிழன் பெண்ணைத் தெய்வநிலையில் வைத்து போற்றியவன். 2000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வாழ்ந்தபெண்கள் அறிவு, ஆற்றல் மிக்கவர்களாய் ஏன்? ஆண்களைவிட பல்துறையிலும் புகழோடு வாழ்ந்ததை சங்க இலக்கியங்கள், காப்பியங்கள் வெளிப்படுத்தும். சங்க இலக்கியப் பனுவல்களை 50இற்கும் மேற்பட்ட பெண்பாற் புலவர்கள் பாடியிருக்கிறார்கள் என்றால் உலகில் எந்த நாட்டிலும், எந்த இனத்திலும் காணப்படாத உயர்ச்சியை தமிழ்பெண்கள்(சங்ககால ஔவையார் உட்பட) பெற்றிருந்தார்கள். இன்று வெளிப் பண்பாடு ஊடுருவியதால் சில இளம் குடும்பப் பெண்கள் தலைகீழாக(பெண் சமத்துவமாம்) நிற்கின்றனர். ஆண்களிலும் சில தறுதலைகள் இருக்கத்தான் செய்கின்றனர். இன்று வடமாகாணத்தில் உள்ள எல்லா உசாவல்(நீதி) மன்றங்களையும் நிரப்பி நிற்பவர்கள் (கணவன் வேண்டாமாம் மாதாமதம் அவரின் பணம் வேண்டுமாம்) இவர்களே. இன்றைய கல்வி அறம்,அறிவு சார்ந்ததாய் இல்லாததால் கொள்ளைக்காரரையும், பண்பு, ஒழுக்கம், மனிதநேயமற்ற மனிதர்களையும் உருவாக்குவதில் குறியாய் செயற்படுகின்றது. இக்கல்வியாளர்களைத் தான் மக்களை ஆள(துன்புறுத்த) அரசு கதிரையில் அமர்த்துகின்றது. இதற்குச் சொல்லப்படுவது உலகமயமாக்காலாம், திறந்த பொருளாதாரக் கொள்கையாம். கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆகும் கதைதான. காலம்தான் பதில் கூறவேண்டும்.

இன்று எம் குமுகத்திற்கு வேண்டியவர்கள் கற்பென்னும் திண்மை திரட்டிய அன்னை திருவாட்டி கந்தையா பொன்னம்மா போன்ற பண்பும், பணிவும், ஒழுக்கமும், மனிதநேயமும் கொண்ட தலைமைகளே.

**மகன்தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை**
**என்னோற்றான் கொல் எனும்சொல் (கு.70).**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தந்தை எவ்வழி மைந்தர் அவ்வழி என்பார்கள். அமரரின் பிள்ளைகள் அனைவருமே தந்தையைப் போல் மனிதநேயம் மிக்கவர்களாய் , பண்பாளர்களாய் காணப்படுவது வியப்பில்லைத்தான் ஏனெனில் அது அவர்தம் மரபணுவாயிலான குணம். இதைத்தான் அன்று "குலத்தளவே ஆகுமாம் குணம் என்றனர் போலும். அமரரவர்கள் கடந்த இரண்டு ஆண்டுகளுக்குமேல் படுக்கையாகவும், தன்னினைவற்றும் இருந்த நாட்களில் அல்லும் பகலுமாய் மாறிமாறி அன்னையவர்களோடு இணைந்து நலம் பார்த்ததானது, இவர்கள் இப்படிப் நலம் பார்ப்பதற்கு அமரர்(தந்தையார்) அவர்கள் இவர்களுக்கு என்ன செய்துவிட்டார் என்ற வினாவை சிலர் மனதில் ஏற்படுத்தும் என்கின்றார் வள்ளுவனார். அமரரவர்கள் கொடுத்து வைத்தவர் என்று போற்றுமளவிற்கு அமரரின் துணைவியாரும், பிள்ளைகள் கணேசு, குகா, பிரபா, சாந்தா, அவர்தம் துணைகளும், தமக்கு இயலுமான வழிகளில் எல்லாம் பணிசெய்தனர். இன்னொருவிதத்தில் இவர்களும் கொடுத்து வைத்தவர்கள் என்றே கூறுவேண்டும். ஏனெனில் தங்கள் தந்தைக்கு தம்மாலான கடமையைச் செய்ததன் மூலம் முழுமன நிறைவையும் பெற்றறிருக்கின்றனர். அன்னாரின் இறுதி நிகழ்வுகளிலே பிள்ளைகள் மகேசு, கருணா, அமரர் சிவாவின் குடும்பங்களும் கலந்துகொள்ள முடியவில்லை என்றாலும் உங்களோடு 65ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்துள்ளார் என்பதை மனதில்கொண்டு உங்களை ஆற்றுப்படுத்தி அமைதி கொள்ளவேண்டும். உடலால் அவர் இல்லை என்றாலும் அவர் நீங்களாய், உங்கள் பிள்ளைகளாய், பேரப்பிள்ளைகளாய் உங்களுக்குள்யேயே இருக்கிறார் என்பதையிட்டு அமைதிபெறவேண்டும். இன்று இரண்டு பிள்ளைகளைப் பெற்றுவிட்டு வருமானம் போதாதென்று ஓலமிடுகிறது தமிழ்குமுகம். போதாதற்கு தானே தன்னினத்தை அழிக்கிறது. ஆனால் அன்று அவர்கள் போதாதென்றோ, சுமையென்றோ சிந்திக்கவில்லை. போதும் என்று வாழ்ந்து வெற்றிவீரராக தம் வாழ்வை ஓடி முடித்திருக்கின்றனர்.

எனது இளமைக் காலங்களை நினைத்துப் பார்க்கின்றேன். எமது தந்தையார் 1960 இல் கிளிநொச்சியில் பணியாற்ற வந்தபோது எமக்கு அடைக்கலம் தந்தவர்கள் நாம் அன்பாக குஞ்சியையா, குஞ்சியம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றழைக்கும் அமரரும், அவர்தம் துணைவியாருமே. இது பொய்யுறவல்ல இரத்த உறவு. 1974ஆம் ஆண்டில் எனது திருமணத்தை இந்த வீட்டில் வைத்து முன்னின்று நடத்தியவர்களும் இவர்கள்தான். அந்நாட்களில் பல நேரங்களில் எனக்கு அறிவுரை (புத்திமதி) குஞ்சி வழங்கியது இன்றுபோல் நினைவிருக்கிறது. குஞ்சிக்கு எனது தந்தையார் இன்னொரு வழியில் மைத்துனராகவும் இருந்தார். இதன் காரணமாய் எனது தங்கையை அமரர் புவனேந்திரராசா(சிவா)விற்கு மணம் முடித்து வைத்ததால் எம் உறவு இன்னும் பலமானது. இவர்களை எம்மால் என்றுமே மறக்கமுடியாது. கடமைப்பட்டவர்கள்.

**செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்**
**வானமும் ஆற்றல் அரிது (கு.101)**

ஒரு பண்பாளரை, ஒருமதியுரையாளரை, ஒரு மனிதநேயரை, ஒரு நடுநிலையாளரை இந்த மண்ணும், நாமும் இழந்திருந்தாலும் அவர் உடலே எம்மைவிட்டுப் பிரிந்திருக்கிறது. உயிர் எம்முள் இருக்கிறது. அவர் என்றும் எம்முடன் வாழ்வார் என்று நம்மை ஆற்றுப்படுத்தி அமைதிபெற இயற்கையை (இறைவனை) இறைஞ்சி நிற்போம்.

**அமைதி! அமைதி!! அமைதி!!!**

**கலைவல்லார்(கலாபூசணம்)**
**நா.வை.குமரிவேந்தன்(மகேந்திரராசா)**
**நிறுவநர்**
**இலங்கைக் குமரித் தமிழ்ப் பணிமன்றம்.**
**கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாள்

இலங்கைத் தீவின் வட திசை அமைந்த யாழ்ப்பாணக் குடா நாட்டின் தென் மேற்குப் பக்கத்தே அமைந்த ஏழு தீவு தன்னிற் தூரத்தே உள்ளதும் பசுத்தீவு, பாற்தீவு, மூலிகைத் தீவு என்ற பலவகைப் பெயரினைக் கொண்ட நெடுந்தீவு தன்னிற் தனிநாயகம் முதலியார் பிறந்த ஊரிலே எனது அயல் வீட்டிலே குட்டிப்பிள்ளை என்பவர் வாழ்ந்து வந்தார். சிறந்த விவசாயி அவருக்குப் பிறந்த முதல் ஆண்பிள்ளை கந்தையா ஆவார். இவர் நெடுந்தீவு சுப்பிரமணிய வித்தியாசாலையிற் படித்து வந்தார். படிப்பிலே கெட்டிக்காரன். சிறிய வயதிலே உறவினர் பலருடன் கிளிநொச்சி சென்று விவசாயம் செய்தார். தந்தை தாயரும் ஒன்றாகச் சேர்ந்து அனைவரையும் குதூகலமாகக் கதைத்து அன்பாய் இருப்பார்கள். கிளிநொச்சி ஊரிலே சிறந்த விவசாயி கிளிநொச்சியில் உருவாக்கிய இரண்டாவது குடியேற்றம் உருத்திரபுரம் குடியேற்றத்திட்டம் ஆகும்.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஒவ்வொரு அதிபர் பிரிவில் இருந்தும் சொந்தக்காணி இல்லாத அதிகம் பிள்ளைகள் உள்ள குடும்பங்களைத் தெரிவு செய்து இக் குடியேற்றத்திட்டத்திற் குடியேற்றம் செய்தனர். ஒரு குடியேற்ற வாசிக்கு மூன்று ஏக்கர் வீட்டுடன் கூடிய நிலமும், நான்கு ஏக்கர் வயல் நிலமும், ஒரு சோடி எருமை மாடும், ஒரு இரும்புக் கலப்பையும், நான்கு மாதம் உதவிப்பணமும் கொடுக்கத் தீர்மானித்தனர். இதன் காரணத்தால் யாழ்ப்பாணத்தில் உள்ள கிராமங்களும் உருவாகின. உதாரணத்துக்கு யாழ்ப்பாணக் குறுக்கு, சாவகச்சேரிக் குறுக்கு, தீவுக்குறுக்கு என்று எல்லா ஊரும் காணப்பட்டது.

எங்கள் குடும்பம் யாழ்ப்பாணத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்டதால் யாழ்ப்பாணப் பிரிவிலும் கந்தையா அவர்கள் குடும்பம் கரைச்சிப் பிரிவில் இருந்து வந்ததால் கரைச்சிப்பிரிவில் வீடுகள் கொடுக்கப்பட்டது.

அதற்குள் இரு வீடுகள் தலைமுடி வெட்டுபவர்களுக்கும் வீட்டுத் திட்டத்தின் கடைசிப் பகுதியில் மேளம் அடிப்பவர்களுக்கும் கொடுக்கப்பட்டது. சிறுபான்மையினத்தவர் எனத் தங்களை வேறுபடுத்திக் காட்டப்பட்டதால் இனி வரும் குடியேற்றத்திட்டங்களில் இப்பாகுபாடு காட்டக்கூடாது எனத் தீர்மானித்து இதன் பின்னைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியேற்றத்திட்டங்களில் எல்லோரும் இனப் பாகுபாடு இன்றிக் குடியேற்றப்பட்டனர்

சொற்ப நாட்களில் நான் விவாகம் செய்ததாற் பழையபடி கந்தையா அவர்களின் வீட்டுக்குப் பக்கத்து வீட்டிலேயே குடியேறினேன். இதனால் எங்கள் தொடர்பும் நீண்டதானது. அவர்கள் வீட்டுக்கு முன்னால் ஒரு கடையும் போட்டிருந்தனர். பக்கத்திலே சங்கக்கடை வீதியோரத்தில் சிங்கள பேக்கரி ஒன்று. மறு பக்கத்திலே எமது வளவிலே சலூன் கடை ஒன்று. மறுபக்கத்திலே தேனீர்க்கடை இப்படிக் கலகலப்பான மக்கள் சந்திப்பு கந்தையா அவர்களின் இசையோடு பாடல்கள் எனது வீட்டை அண்மித்ததால் அமைதி. உனது வீடு வந்தால் கைத்தடியுடன் வாசல்வந்து கூட்டிச் செல்வாய். மனைவி தேநீருடன் வருவார். உனது வாய் புதினம் சொல்லும். இவை எல்லாம் இனி எப்போது கேட்போம்? உன் முகம் காண முடியாது எங்கு சென்றாய்? என்ன செய்வோம்? இது தான் நியதி. நேற்றிருந்தார் இனறில்லை என்னும் பெருமை உடையது இவ்வுலகு

அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் போற்றி வேண்டுதல் செய்வோம் அனைவரும் ஒன்றாய் இறைவனைப் போற்றி பிரிவால் ஆறாத்துயர் உற்றிருக்கும் அனைவர்க்கும் ஆறுதல் கூறுவதுடன் அனைவருடனும் சேர்ந்து பிரார்த்தித்து சாந்தி சாந்தி எனக் கூறி விடை பெறுகின்றேன். அனைவருக்கும் வணக்கம்.

**நா.நாகலிங்கம்**
**ஓய்வு பெற்ற அதிபர்**
**இல: 111, D-10,**
**உருத்திரபுரம்.**
**(கனடா)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர் போற்ற வாழ்ந்திருந்த உத்தமன்

நெடுந்தீவைப் பூர்வீகமாகவும், கிளிநொச்சி மாவட்டத்தின் அருமை, பெருமைகளுக்கான அடையாளமாக, வளம் நிறைந்த பூமியாக, ஈழத்தமிழர் தம்பண்பாடு, பாரம்பரியங்களோடும், வரலாற்று மரபியல்களோடும் பின்னிப்பிணைந்துள்ள உருத்திரபுரம் மண்ணை தன் வாழ்விடமாக்கி அம்மண்ணின் மூத்த தலைமுறைகளில் ஒருவராக 98 ஆண்டுகள் வாழ்ந்து பொலிந்தவர் அமரர். திருவாளர். குட்டிப்பிள்ளை கந்தையா அவர்கள்.

அறிவு, ஆற்றல், ஆளுமை, ஆன்மீகம் என்பவற்றால் வலிமை பெற்ற மனிதனாகவே அவர் வாழ்ந்திருந்தார். இவரது வாழ்வு முழுமையும் உருத்திரபுர மண்ணினதும், மக்களினதும் வளர்ச்சியோடும், வரலாற்றோடும் இரண்டறக் கலந்திருந்தமை அனைவரும் அறிந்ததே! உருத்திரபுரக் கிராமத்தின் பல்துறைசார் வளர்ச்சிப் பரிமாணத்தில் ஒரு விவசாயியாய், மூத்தகுடிமகனாய், ஊர்ப்பணியாற்றும் பிள்ளைகளை இந்த உலகுக்குத் தந்த தந்தையாய், காலம்காலமாக தமிழ்த் தேசியத்தை நேசித்து வாழ்ந்திருந்து அந்த மண்ணின் மைந்தனாய் இவர் ஆற்றிய பணியின் கனதி அளப்பரியது.

எப்போதும் சிரித்த முகம், மற்றவர் துன்பம் கண்டு நெகிழும் உள்ளம், உரத்துப் பேசியறியாத பக்குவம், வயதுக்கும் வாழ்க்கை முறைக்கும் உரித்தான அனுபவ அறிவு, எதையும் நேருக்குநேர் சொல்லிவிடுகின்ற நெஞ்சுரம், தோற்றத்திலும், மனதிலும் பேணி வந்த தூய்மை, அடுத்தவரை அரவணைக்கும் பாங்கு, மனத்தாலும் பிறர்க்கு தீங்கிளைக்காத மனிதப் பண்போடு திறந்த மனத்தினனாகக் கலந்துரையாடுவதும், இன்மொழி பேசி இதயங்களைக் கவர்வதும் இவரது ஆளுமைக்கு வலுச்சேர்த்த அணிகலன்கள் எனலாம். இந்த உன்னதமான அணிகலன்களோடு தன் குடும்பத்தையும், சமூகத்தையும், உறவுகளையும் நேசித்து அந்திமகாலம் வரை அவற்றின் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் வலுச்சேர்த்து தன் வழியிலேயே தன் பிள்ளைகளையும், பேரப்பிள்ளைகளையும் உருவாக்கி, அவர்களையே தன் உலகமாகக் கொண்டு வாழ்ந்திருந்த அமரர். குட்டிப்பிள்ளை கந்தையா அவர்களின் இழப்பென்பது எப்போதும் ஈடுசெய்ய முடியாத இழப்பே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலப்பெருவெளியில் கரைந்து போகும் சாமான்ய மனிதனாக அல்லாது ஊரோடும், உறவுகளின் உணர்வோடும் கலந்து, எம் உள்ளங்களில் நிறைந்திருந்து, வாழும் காலம் முழுதும் வாழ்வாங்கு வாழ்ந்திருந்த அமரரின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது உறவுகளின் துயரில் நாமும் பங்கெடுப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல எம்பெருமானின் பாதாரவிந்தங்களைப் பணிந்து நிற்கிறேன்.

**சிவஞானம் சிறீதரன்.**
**பாராளுமன்றஉறுப்பினர்.**
**யாழ்ப்பாணத்தேர்தல் மாவட்டம்,**
**கிளிநொச்சி**
--
Best Regards,

From "Arivakam",
The Office of Hon.S.Shritharan,
Member of Parliament,
Jaffna Electoral District,
Kilinochchi.
Phone : 021-228-0024
Mobile : 077-691-3244



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாண்புடை வாழ்வின் மனப்பதிவு

மனிதரின் பிறப்பும் வாழ்வும் வாழுகின்ற ஒவ்வொருவருக்கும் ஒரு வழிகாட்டியாக அமைந்துள்ளது. இந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்தின் வரலாற்றில் உருத்திரபுரத்தின் மூத்தவராக அறியப்பட்ட கந்தையா அவர்களின் வாழ்வைப் பார்க்கின்ற போது அக்காலத்தில் கொடிய அடர்ந்த காடுகளால் சூழப்பட்ட இந்த பிரதேசத்தில் முதலில் குடியேறிய இவரும் குடும்பமும் இன்றைக்கு நீங்கள் காணும் உருத்திரபுரத்தை உருவாக்கும் வரை தொடர்ந்து கொண்டு இருக்கிறது. ஒரு பண்பான குடும்பத்தலைவனாக தனது பிள்ளைகளை எல்லாம் நல்ல முறையில் வளர்த்து ஆளாக்கி அவர்களது வாழ்வுக்கு உகந்த துணைகளைக் கண்டறிந்து இணைத்து குட்டிக் கந்தையா குடும்ப விருட்சத்தை அவர் உருவாக்கியதற்காக தாண்டிய சுமைகள், சோகங்கள் அதிகமானவை. எனினும் தளர்ந்து போகாத வீரமும், வீறாப்பும் அவரிடம் நாம் கற்றுக்கொண்ட பண்புகள். எம்மவர் எங்கெல்லாம் இருக்கிறார்களோ அங்கெல்லாம் அவர்களுக்கு ஏற்படும் துன்ப துயரங்களின் போது தவறாது அவரும் அவர்தம் மனைவியாரும் ஓடோடி வந்து சுமைதாங்கிகளாக ஆறுதல் தெரிவித்து செல்லும் எம் ஊரின் பண்பாட்டை கற்றுத்தந்த முன்னோடிகளில் ஒருவர். கறுப்புக்கண்ணாடி, வெள்ளை வேட்டி, சால்வை கழுத்தில் சுற்றியபடி அவர் நடந்து வரும் காட்சி இன்றும் என் கண்களில் நிழலாடுகின்றது. அதிகம் பேசத் தேவையில்லை. அவரது கட்டளைகள் எல்லாம் அப்போதே ஆலோசனைகளாக அமுலாக்கப்படும். அதுவே அவரது முகாமைத் திறன். பேசும் போது பிள்ளைகளுக்கோ எமக்கோ நேரே பார்த்து பேசுவதில்லை. எமது காதுகள் மட்டும் அந்த வார்த்தைகளைக் கேட்க வேண்டும் என்பது போன்று எங்கேயோ பார்த்தபடி அவரிடமிருந்து வரும். அந்த வழிகாட்டிக் குறிப்புக்கள் எத்துனை தூரம் எங்களை வழிப்படுத்திச் செல்லும் அறிவுரைகளாகவே இருந்துள்ளது. எனக்கென்னவோ இவரைக் காணும் போதே பணிவு தொற்றிக் கொள்ளும். அதனால் பகிர்வு குறைவாகவே இருக்கும். அந்த வகையில் நல்ல பண்பான பிள்ளைகளை எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர்களாக தந்திருந்தார் இவர்கள் வீட்டில் மகேஸ் அண்ணன் எமது முதல் நண்பர். நாங்கள் பழகிய முதல் ஆள். பின்னர் சாந்தா அக்கா, கருணா, சிவா அண்ணர், குகா என நீண்டு கடைசியில் தான் கணேசர் அறிமுகமானார். கடைசி வரை அவர் தான் நல்ல நண்பராக மாறி விட்டார். நாம் இருவரும் இவரது குடும்ப வாழ் இணைபிரியா உறவு என்பதை அடிக்கடி சிலாகிப்போம். நிறைவாக வாழ்ந்தீர், நீண்ட காலம் வாழ்ந்தீர், நினைக்கும் போதெல்லாம் நிறைவு பெற வாழ்ந்து காட்டினீர்கள். அந்த வழிகாட்டும் வழித்தடத்தில் நாம் பயணிக்கின்றோம். அதுவே எமக்கு ஆறுதலாகவுள்ளது.

ஐயா சென்று வாருங்கள்.

**அமரசிங்கம் கேதீஸ்வரன்**
**உதவி திட்டமிடல் பணிப்பாளர்**
**மாவட்ட செயலகம் – கிளிநொச்சி**

## சின்னத்தான்

**"தக்கார் தகவிலார் என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும்"**

நீங்கள் தக்கார் என்பதற்கு நீங்கள் விட்டுச் சென்ற நற்செயல்களும் உங்களுடைய பிள்ளைகளுமே சான்று நற் பண்பில் நல் ஒழுக்கத்தில் நற் செயலில் மற்றவர்களுக்கு உதவுவதில் உங்களுக்கு நிகர் நீங்களே. உருத்திரபுரத்தில் சிறந்த தலைமகன் உங்களின் பிள்ளைகளே நீங்கள் தலை சிறந்த தந்தை என்பதனை பறை சாற்றி நிற்கின்றனர். அவர்களை வையத்தில் முந்தியிருக்கச் செய்த பெருமைக்குரியவர். நன் மக்கட் பேறு என்பது உங்கள் வளர்ப்பு அப்படியானது பிள்ளைகளின் பணிவு நற்பண்பு நன்முயற்சி பொதுத் தொண்டு என்பனவே வளர்ப்பின் பெருமையை எடுத்துக் காட்டுகின்றது. உங்கள் எல்லா முயற்சிக்கும், உயர்ச்சிக்கும் தோள் கொடுத்து அனைத்தையும் சாதிக்க உறுதுணையாய் இருந்து வழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்தியவர் உங்கள் வாழ்க்கைத் துணைவி எனது அக்கா என்பதில் நான் பெருமையடைகின்றேன். உங்கள் உடல் நிலை நீண்ட நாட்கள் முடியாமல் இருந்த காலங்களில் உங்கள் துணை உங்களை விட்டு எங்குமே அசைந்ததில்லை. எனது அக்கா தங்களுக்குச் செய்த கவனிப்பும், தொண்டும், சேவைகளும் சொல்லிலடங்காதவை. நீங்கள் அக்காவிற்காகவே படைக்கப்பட்டீர்களா? அல்லது அக்கா உங்களுக்காகவே படைக்கப்பட்டார்களா? என்பதனை சொல்ல முடியாத அளவிற்கு கருத்தொருமித்து இல்லறம் நடாத்திய தம்பதிகள் இறுதி நாட்கள் வரை நீங்கள் அக்காவில் மூச்சாக இருந்தீர்கள். இவற்றை எண்ணி பெருமைப்படுகின்றேன்

மகள், மகன்மார், மருமக்கள், பேரப்பிள்ளைகள் அனைவரும் மனமுவந்து செய்த கடமைகளை நாங்கள் கண்ணூடாகச் கண்டு வியந்தோம். தங்களின் இறுதித் தருணத்தில் பிள்ளைகளும் மருமக்களும் பேரப்பிள்ளைகளும் உள்ளூரில் இருந்தவர்களும் வெளிநாட்டில் இருந்த பிள்ளைகளும் அவர்களுக்கான குடும்பங்களும் இந்தியாவில் இருக்கும் மருமகளும், பிள்ளைகளும் அவரின் லண்டனில் வசிக்கும் உங்கள் பேத்தியும், குடும்பமும் பட்ட துன்பங்களும், துயரங்களும் தங்கள் இறுதி நாளிலும் என் அக்காவும் பிள்ளைகளும் மருமக்களும் பட்ட துயரம் கூறிவிடமுடியாது உங்கள் மகன் சிவா மறைவை இத்தனை ஆண்டுகள் கழித்தும் மறக்க முடியவில்லை. எனது அம்மா காலமாகிய வேளை கூட சிவா எப்படிச் செயற்பட்டார் என்பதனை இப்போதும் என்னால் உணர முடிகின்றது. தங்களை ஊர்மக்களும் உறவுகளும் எப்படிக் கௌரவப்படுத்தினார்கள் என்பதைத் தங்களின் இறுதிப்பயணமே சான்றாகும் நீங்கள் எங்களை விட்டு மறந்து விடவில்லை. எங்களுடன்தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள்.

**ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி**

**தங்களின் அன்புமைத்துனர்**
**க. தம்பிஐயா**
**(ஓய்வு பெற்ற தபாலதிபர்**
**கணேசபுரம்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாப்பிள்ளைக் கந்தையா எனும் மகா மனிதர

உருத்திரபுரம் கிராமம் ஆரம்ப குடியேற்றத்தின் போது முதன் முதலில் நடந்த கல்யாணம் எங்கள் கந்தையாண்ணரின் திருமணம் என்பதால் அன்றிலிருந்து மாப்பிள்ளைக் கந்தையர் என்ற காரணப் பெயரால் எல்லோரும் அன்பாக அவரை அழைத்தனர்.

பெயருக்கேற்ற எடுப்பான தோற்றமும், எந்நேரமும் புன் சிரிப்பு தவழும் முகமும், கனிவான பேச்சும், கலையாத முடியும், மடிப்பு கலையாத வெள்ளை வேட்டி சால்வையும் அவரது அடையாளங்கள். இன்றும் என் கண்முன் நிழலாடுகின்றது.

கந்தையாண்ணர் சிறந்த வாசிப்பு பழக்கமுடையவர். ஆத்மீகம் தொடக்கம் அரசியல் வரை அவருக்கு அத்துப்படி. "அந்த நாளையிலே நாங்கள் என்று தொடங்கினார் என்றால் சோட்டம்மான் அம்மன் கோவில் திருவிழாவில் சின்ன மேளம் பிடித்தது முதல் சோழர்காலத்து பழங்கதை வரை சோக்கா சொல்லிக் கொண்டே போவார். கேட்டுக் கொண்டே யிருக்கலாம்...! நினைவுகளை மீட்டிப்பார்க்கின்றேன்.

சிறந்த பக்திமான். கிராமத்தில் ஆரம்பம்முதல் சமய சமூக பணிகளில் முன்னின்று உழைத்த உத்தமன். அவரின் சிறப்பான பூரணத்துவமான வாழ்வின் பயனாக சிறந்த கவிஞர்களையும் கலைஞர், விளையாட்டு வீரர்கள் என வாரிசுகளை வளர்த்தெடுத்து அகவை 98 வரை வாழ்வாங்கு வாழ்ந்து இன்று வானுறையும் தெய்வத்துள் சங்கமமாகியுள்ளார்.

அன்னாரின் பிரிவால் வாடும் குடும்பத்தார், உறவினர்களுக்கு ஆறுதல் கூறி அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மாணிக்கப் பிள்ளையாரை வணங்குகின்றோம்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

நன்றி

**மு.தர்மபாலன்**
**உதவும் கரங்கள் – கனடா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். குட்டிப்பிள்ளை கந்தையா அவர்களின் நினைவுப் பகிர்வு


கிளிநொச்சி மாவட்டத்தின் உருத்திரபுரம் கிராமத்தின் மூத்த குடிகளில் ஒருவராக கிளிநொச்சி மண்ணோடும், இந்த மாவட்ட மக்களின் வாழ்வியலோடும் இரண்டறக் கலந்து இறுதிவரை தன் உற்றார் உறவுகள் நண்பர்கள் என அத்தனை பேரையும் தாங்கி நின்று ஓர் ஆலவிருட்சமாய் வாழ்ந்திருந்த மகத்தான ஒரு உறவை இன்று நாம் இழந்து நிற்கின்றோம். சைவமும் தமிழும் கலந்த குடியேற்றத்திட்டத்தில் வாழ்ந்து இறைபதம் அடைந்த கந்தையா ஐயா, வையத்துள் வாழ்வாங்கு வாழ்கின்ற வாழ்க்கை நெறியை இச் சமூகத்திற்கு காட்டியவர். பெருந்தன்மை உள்ளவராகவும் பேராசை அற்றவராகவும் வாழ்ந்துள்ள மனிதர் இவர் என்பதனை இவரது மரணச் சடங்கு உணர்த்தியிருந்தது. அவரது இறப்பு நிகழ்வில் திரண்டிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களின் கண்ணீர் அவர் வாழ்ந்த வாழ்க்கை நெறியினை ஆழமாக புலப்படுத்தியது.

ஐயா அவர்களது வாழ்வின் சிறப்பிற்கு அடையாளங்களாக நற் புத்திரர்களினை இச் சமூகத்திற்கு அளித்துள்ளார். திருவாளர் கணேசலிங்கம், பிரதேச சபையினுடைய கௌரவ உறுப்பினர். அவருடனும், அவரது சகோதரர்களுடனும் சேர்ந்து பழகும் போது தந்தை தம் சந்ததிகளுக்காக விட்டுச்சென்ற விழுமியங்கள் அவர்களது பண்பிலும் பேசுகின்ற மொழிகளிலும் மலர்ந்துள்ளது. இத்தகைய விருட்சமென பரந்து, வாழும் காலம் முழுவதும் வாழ்வாங்கு வாழ்ந்திருந்த அமரரின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது பிள்ளைகள், உறவுகளின் துயரில் நாமும் பங்கெடுப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்திபெறவும் எல்லாம் வல்ல எம்பெருமானின் பாதாரவிந்தங்களை பணிந்து நிற்கின்றேன்.

**அருணாசலம் வேழமாலிகிதன்**
**தவிசாளர்,**
**கரைச்சி பிரதேச சபை,**
**கிளிநொச்சி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல எண்ணங்கள்
# நம்மை வாழவைக்கும்.
# சிந்திப்போம்;
# செயற்படுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாளுக்கான நல்ல எண்ணங்கள்

சிந்தனைகள் மனதுக்கு உணவாகும். தினமும் ஒரு புதிய சிந்தனை புதிய உணவு மட்டுமல்ல, அத்துடன் வாழ்கையில் மனதின் ஆரோக்கியத்திற்கும் ஆர்வத்திற்குமான அத்தியாவசிய போஷாக்கினையும் கொடுக்கின்றது. குழப்பமும் சச்சரவுகளும் நிறைந்த இந்த நாட்களில் இது மிகவும் முக்கியமாகும்.

**ஒவ்வொரு தினமும் அதற்குரிய சிறப்பைக் கொண்டுள்ளது.**

| | | |
|---|---|---|
| திங்கட்கிழமை | – | அமைதி நிறைந்தது |
| செவ்வாய்கிழமை | – | அன்பு நிறைந்தது |
| புதன்கிழமை | – | சக்தி நிறைந்தது |
| வியாழக்கிழமை | – | ஞானம் நிறைந்தது |
| வெள்ளிக்கிழமை | – | தூய்மை நிறைந்தது |
| சனிக்கிழமை | – | கருணை நிறைந்தது |
| ஞாயிற்றுக்கிழமை | – | பேரின்பம் நிறைந்தது |

ஒவ்வொன்றும் நிறைந்த தெரிவுகளை அளிக்கின்றது. இது மனதிற்கு நல்ல விருந்தாக அமையும். இது அதி சிறந்த ஆகாரமெனச் சிபாரிசு செய்யப்படுகின்றது.

## பேரின்பம்

பேரின்பம் புலன்களுக்கு அப்பாற்பட்ட மகிழ்ச்சியாகும். சிரிப்புகளுக்கும் கேளிக்கைகளுக்கும் அப்பாற்பட்டது. நான் அறிந்த உல்லாசத்தின் சலனங்களுக்கு அப்பாற்பட்டது....... மென்மையான காற்றின் இழுவைக்கு அள்ளுப்பட்டுக் காணாமல் போவதில்லை....... மின்னுகின்றவற்றை, பிரகாசிக்கின்றவற்றைப் பார்க்கக் கண்களை உபயோகிப்பதல்ல....
இசை வெள்ளத்தில் தன்வயப்படுவதற்குக் காதுகளை உபயோகிப்பதல்ல... பருவ காலத்தின் முதல் பழத்தின் இனிமையைச் சுவைப்பதற்கு வாயை உபயோகிப்பதல்ல.... இவற்றை விட நான் தனிமையில் அமர்ந்து...நிசப்தமாக அமைதியான எண்ணங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குள்ளே திருப்புவது .....மௌனத்தின் சத்தத்தைக் கேட்டுக் கொண்டு இருப்பது ....பௌதீகத்திற்கு அப்பால் திருப்பப்பட்ட அந்த அமைதியான, அந்தத் தூய, ஆன்மீகத்துடன் ஒத்திசைக்கின்ற எண்ணங்கள்...... சில எண்ணங்கள்......பேரானந்தம் மிக்க எனது தந்தையுடன் இணைகின்றன..... அமைதி நிறைந்தவனாக – அவரது அமைதியினை அனுபவிக்கின்றேன்......பேரானந்தம் மிக்கவனாக – அவரது பேரானந்தத்தை அனுபவிக்கின்றேன்.

## பேரின்பமான நாளுக்கான சிந்தனைகள் – ஞாயிற்றுக்கிழமை

01. திருப்தி உள்ளவர் வங்கியில் சிறிய கணக்கொன்றை வைத்திருப்பினும் பெரும் செல்வத்தைக் கொண்டவராக உணர்வார்.

02. சுதந்திரம் மனதிலிருந்தே உதயமாகின்றது –கயிறுகளை அறுப்பதால் அல்ல.

03. மற்றவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுப்பது ஒரு பெரும் தர்மமாகும்.

04. முகமலர்ச்சி – அதனை உடையவரை உற்சாகமாக வைத்திருக்கின்றது, ஏனையவர்களில் புன்சிரிப்பை ஏற்படுத்துகின்றது.

05. எந்தக் கடினமான வேலையையும் ஒரு புன்னகை இலகுவாக்கிவிடும்.

06. சுய முன்னேற்றத்தில் கூடிய நேரத்தைச் செலவிடுங்கள்,அப்போது மற்றவரை விமர்சிக்க நேரம் இருக்காது.

07. வாழ்வின் இனிமையைச் சுவைப்பதற்கு, உங்களுக்குக் கடந்த காலத்தை மறக்கும் சக்தி இருக்க வேண்டும்.

08.வீண் வேலை உங்களைச் சுமையாக்கி, களைப்படைய வைத்துவிடும், நேர்முகமான வேலை உங்களை மகிழ்ச்சியாகவும், இலேசாகவும், புத்துணர்ச்சியுடனனும் இருக்கச் செய்கின்றது.

09. மிகவும் சந்தோஷமாக இருப்பவர்களுக்கு உள்ளார்ந்த சோம்பல் இருக்காது. சோம்பல் ஒரு பெரும் விகாரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. சமநிலையே பேரின்பமான வாழ்வின் உண்மையான அத்திவாரம்.இதை எப்போதும் மனதில் வைத்திருங்கள்.உங்களது நிகழ்காலமும் எதிர்காலமும் எப்போதும் பிரகாசமாக இருக்கும்.

11. திருப்தியும் பேரின்பமும் ஒன்றோடு ஒன்று கைகோர்த்துச் செல்லும். இக்குணங்கள் மற்றவர்கள் மத்தியில் உங்களுக்குப் பெரும் வசீகரத்தை ஏற்படுத்துகின்றன.

12. ஒவ்வொரு அடியையும் இறைவனின் நினைவில் எடுத்து வைத்தால், ஒவ்வொரு கணமும் எவ்வளவு பாக்கியம் நிறைந்தது என்று கற்பனை செய்து பாருங்கள்.

13. சில தவறுகளினால் நேற்றைய தினத்தை ஆழ்ந்த துக்கத்தில் இழந்திருக்கலாம், அதை உங்கள் ஞாபகத்தில் வைத்திருப்பதன் மூலம் இன்றைய நாளையும் இழந்து விடாதீர்கள்.

14. முகத்திற்கு அழகு முகமலர்ச்சி. உட்கோபம் உடையவர் உண்மையிலே அவலட்சணமானவர்.

15. வாழ்க்கை ஒரு நாடகமாகும் நான் அதன் கருப் பொருளை உணர்ந்து கொண்டது பெரும் மகிழ்ச்சியாகும்.

16. நல்ல முயற்சிகளை மேற்கொள்வதில் அதிக சந்தோஷத்தை அனுபவம் செய்தால், இந்த முயற்சிகள் பலன் தரும்போது மகிழ்ச்சி மேலும் அதிகமாகும்.

17. சிரிக்கும்போது நீங்கள் சந்தோஷம் அடைவது மட்டும் அல்ல, மற்றவர்கள் வாழக்கையிலும் ஒளிக்கீற்றினைக் கொண்டு வருகின்றீர்களா.

18. சகல சூழ்நிலைகளிலும் சமநிலையுடன் இருத்தலே மகிழ்ச்சிக்குத் திறவுகோலாகும்.

19. பலர் உங்களுடன் சண்டைசச்சரவு செய்ய விரும்புவார்கள்: புன்னகையும் அன்பான மனப்பாங்குமே உங்களுக்குத் தேவையான ஆயுதங்கள் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. சில வேளைகளில் புன்னகையானது பாலைவனத்தில் ஒரு துளி நீரைப் போன்றதாகின்றது.

21. நீங்கள் பொழுதுபோக்குகளில் ஈடுபடவும் களிப்படையவும் வேண்டும். ஆனால் இவை உள்ளார்த்தமாக உங்கள் வாழ்க்கையை வளமாக்கின்றனவா என்று சோதித்துப் பாருங்கள்.

22. இந்தக் கணத்தை நான் மகிழ்ச்சியாக்கினால்,அடுத்த கணத்தையும் மகிழ்வானதாக ஆக்கிக் கொள்வதற்கான என்னுடைய வாய்ப்புக்களை அது அதிகரிக்கின்றது.

23. பணக்காரனின் செல்வம் களவாடப்படலாம் அல்லது எரிக்கப்படலாம். ஆனால் புத்திசாலியின் மகிழ்சியும் அறிவும் நிலைத்து நிற்கும்.

24. நித்திய துக்கமுள்ள இந்த உலகிலே எது அதிகச் செல்வத்தைக் கொண்டுவரும்– பணமா? அல்லது மகிழ்ச்சியா?

25. ஒரு மனிதன் மகான் எனப்படுவது, ஒரு கடினமான சூழ்நிலையை மகிழ்ச்சியுடனும் சிரிப்புடனும் எதிர்கொளளும் போது தான்.

26. பௌதீக அழகு வயது அதிகரிக்கும் போது அல்லது விபத்தினால் மறைந்துவிடும். ஆனால் அன்மீக அழகு அழிக்க முடியாதது.

27. முட்டாள் மற்றவர்கள் தன்னைப் பார்க்க வேண்டும் என்று விரும்புகின்றான், புத்திசாலியோ பார்வையாளர்களில் ஒருவராகப் புன்முறுவல் பூத்தவாறு இருப்பார்.

28. நேர்மையுடனும் உண்மையான இதயத்துடனும் இருப்பவர் இலேசாகவும், மன அழுத்தமின்றியும் எப்போதும் இருக்கின்றார்.

29. உண்மையான வெற்றி என்பது புலனங்கங்களின் மீதான பூரணமான கட்டுப்பாடாகும்.

30. உங்களுடைய மனம் பந்தங்களிலும் கடந்த காலப் பிரச்சினைகளிலும் அகப்பட்டிருந்தால் உங்களால் நிகழ்காலச் சந்தோஷத்தை அனுபவம் செய்ய முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. நீங்கள் வாழ்க்கையில் முன்னேற விரும்பினால் உங்கள் தேவைகள் அதிகரிக்காது இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

32. உங்கள் பிரச்சினைகளை மறப்பதற்கு இறைவனை நினையுங்கள்.

33. நீங்கள் விரும்பியது கிடைக்கவில்லையெனில்,அது உங்களுக்கு தேவையற்றதாக இருக்கக்கூடும்.

34. உங்கள் மனதை நெறிப்படுத்தி ,எல்லாச் சந்தர்ப்பங்களிலும் குளிர்ச்சியாக இருங்கள.

35. நெடுங்காலமாகத் தொடர்கின்ற பழக்கத்திலிருந்து வெளியேறுவதற்கு இலகுவான வழியைக் காண்பதே மிகவும் கடினமான விடயமாகும்.

36. எதிர்பாராத நிகழ்வுகள் என்று எதுவும் இல்லை. வாழ்க்கைப் பூந்தோட்டத்தில் உள்ள ஒவ்வொரு மரமும் ஏதோவொரு அர்த்தத்தினை வெளிப்படுத்தும்.

37. அனுசரித்து நடக்கத் தெரிந்தவனே பிழைக்கத் தெரிந்தவன்.

38. மற்றவர்கள் உங்களுக்கு எதிராக இருந்தால், மனம் தளர்ந்து விடவேண்டாம். இறைவன் துணையுடன் உங்களால் எதை பெறமுடியும் என்று பாருங்கள்.

39.நீங்கள் உங்களுடைய இதயத்தை மற்றவர்களுக்குக் கொடுத்தால் அவர்கள் அதை உடைத்து விடக்கூடும். உங்கள் இதயத்தை இறைவனிடம் கொடுத்து, அதனை வலிமையாக்கிக் கொள்ளுங்கள்.

40. பிரச்சினைகள் வரும்போது உங்களுடைய தலையை சுவரில் மோதினால் உங்களுடைய மூளைதான் குழம்பிப் போகும்

41. இந்த உலகம் பயங்கர புயல் போல மாறும் போது மிகவும் அழகான புகலிடம் இறைவனே ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

42. நீங்கள் அனைத்தையும் சந்தோஷ உணர்வுடன் செய்தால் மிகச் சிரமமான பணி என்று எதுவும் இல்லை.

43.நீங்கள் சிறப்பாக முயற்சித்தாலும், உங்கள் சிறந்த முயற்சி போதுமானதாக இல்லையெனில், அதனை இறைவனின் கரங்களில் ஒப்படைத்து விடுங்கள்.

44. நீங்கள மிகவும் விஷேசமானவர் என்பதை நினைவில் கொள்ளுங்கள் உங்கள் பாகத்தை வேறு எவராலும் உங்களை விடச் சிறப்பாக நடிக்க முடியாது.

45. இறைவன் எனது அதிமேலான துணை என்பதனை நான் மறக்கும்போதே தனிமை வருகின்றது.

46. உங்கள் எதிர்பார்ப்புகளை இறைவனிடத்தில் வையுங்கள். அப்போது மனிதர்களால் உங்களை வீழ்த்த முடியாது.

47. வயது அதிகரிப்பது ஒரு விடயமல்ல. ஆனால் கையாள்வதற்கு எடுத்துக்கொள்ளும் விடயங்களாலேயே நீங்கள் வயோதிபர் ஆகி விடுவீர்கள்.

48. மின்குமிழில் மின்னிழை இல்லையெனில் ஒளி இல்லை. உங்கள் வாழ்க்கையில் இறைவன் இல்லையென்றால் வாழ்க்கையே இல்லை.

49. எந்தளவிற்கு நீங்கள் உங்களைப் புரிந்து கொள்கிறீர்களோ அந்தளவுக்குச் சந்தோஷமாகவும் அமைதியாகவும் வாழ்வது எளிதாகுகின்றது.

50. உங்களுடைய பற்று அனைத்தும் ஒரேயொரு இறைவன் மீது உள்ளபோது உங்களுடைய சாதனைகள் அதிகமாகும்.

## அமைதி

எம்மைச் சுற்றியுள்ள அனைத்துமே தொடர்ந்து அமைதியற்ற நிலையில் இருப்பதைக் காணும் போது அமைதி பற்றிப் பேசுவது பயனற்றது போல் தெரிகின்றது. இந்த நிலைமைதான் எங்களின் சொந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியின் ஆதாரத்தைத்தேடியடைந்து வாழ வேண்டிய தேவையை எங்கள் மீது அழுத்தி நிற்கிறது.

பூக்களைப் பாருங்கள்,அவையும் இந்த அமைதியற்ற சூழலில் வாழ்கின்றன.அவையும் மாசடைதலையும் உலக இயற்கையின் அழிவினையும் பொறுத்துக் கொள்ள வேண்டியுள்ளது. நெருக்கடியான வீதிஓரங்களில், சதுப்பு நிலங்களில், பாலைவனங்களில், முட்களுக்கிடையில், சில வேளைகளில் சாணக்குவியலில் என அவை எங்கிருப்பினும் சதா அழகுடன் மலர்ந்து, மிகுந்த நறுமணத்தை வீசுகின்றன. ஒவ்வொரு தருணத்திலும், துயர் மிகுந்தவேளையிலும் கூட, மலர்கள் வழங்கப்படுதல் தற்செயலான ஒரு நிகழ்வு அல்ல. பூக்கள் அமைதியையும் சாந்தத்தையும் வெளிக்கொணர்பவையாகும். இது அவற்றின் சுபாவமாகும்.

நாங்கள் பூக்களைப் போன்றவர்களே. நாங்கள் இறைவனின் தோட்டத்துப்பூக்கள், உலகளாவிய இந்த தோட்டத்தில் தினசரி பதற்றம், சந்தடிக்கிடையில்–நாங்களும் கூட களங்கத்திற்கும் அவமதிப்புக்குமான அச்சுறுத்தப்பட்ட சூழ்நிலையில் வாழ்கின்றோம் –பூக்களைப் போல் நறுமணத்தை நம்மை சுற்றிப் பரப்பிக்கொண்டு வாழ நாங்கள் எதிர் பார்க்கப்படுகின்றோம். ஆத்மாவின் மூலாதாரமான தன்மை அமைதி என்பதை நாங்கள் உணரும் போது அமைதிக்கடலான இறைவனுடன் நாங்களும் இணையலாம். ஆகவே அமைதி சொருபமாகி,உயிருள்ள சிந்திக்கும் மலர்களாக வாழ்வோம்.

## அமைதியான நாளுக்கான சிந்தனைகள்– திங்கட்கிழமை

01. எதிர்காலமாக இருந்தது இப்போது நிகழ்கின்றது. இப்போது நிகழ்வது கடந்த காலம் ஆகுகின்றது. ஆகவே கவலை ஏன்?

02. ஒவ்வொரு நாளிலும் ஓர் இரகசியம் மறைந்திருக்கின்றது. நீங்கள் இதைப் பலமுறை பார்த்திருக்கின்றீர்கள்.

03. என்னுடைய முயற்சியின் பலனை அனுபவிக்கப் பொறுமையிருந்தால், அது கனியாத காயை உண்ண முயற்சிப்பது போலாகும்.

04.ஒரு சந்தர்ப்பத்தைத் தவறவிட்டால் கண்ணீர் சிந்தாதீர்கள். அடுத்ததையும் தவற விடாமலிருக்கப் பார்வையை தெளிவாக வைத்திருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05.எதையும் பணிவுடன் அனுசரித்து நடப்பவரே அதிக மகத்துவம் உடையவர்.

06. வஞ்சகன் ஒருவனால் உண்மையான மன அமைதியை அனுபவிக்க முடியாது. அவனுடைய தந்திரம் அவனுக்கே முடிச்சாகிவிடும்.

07. நேர்மையான ஒருவரில் மற்றவர்கள் திருப்தியடையும் அளவிற்குத் தானும்' தன்னில் திருப்தியுடையவராக இருப்பர்.

08. சமூகத்தில், நாட்டில், உலகில் இன்றுள்ள மிகவும்சிக்கலான பிரச்சினைகளுக்கு ஒரேதீர்வு ஒழுக்கம், ஒழுக்கத்தை இழந்தால் எந்தக் கௌரவமும் இருக்காது.

09. எல்லாக் கடமையிலும் நீங்கள் உண்மையாக இருந்தால், உங்களுடைய எண்ணம், பேச்சு, செயல்கள் யாவும் முழு நம்பிக்கையை ஏற்படுத்தும்.

10. இறைவனும் காலமுமே இரு மிகச் சிறந்த குணமாக்குபவர்கள்.

11. நான் அல்லாத ஒன்றை நான் என மற்றவர்களை நம்ப வைத்தால், முட்டாளாக்கப்படுவது யார்?

12. மனித விழுமியங்கள் , அறநெறி பண்புகள் ,ஆன்மீகப் பண்புகள் என்பவை ஸ்தாபிக்கப்படாமல் உண்மையான சுதந்திரம் இருக்க முடியாது.

13. நீங்கள் கோபப்படும் போது பெருமளவு சக்தி வீணாகின்றது. சக்தியை விவேகமாகப் பயன்படுத்துங்கள்.

14.மௌனம் மனதிற்கு ஓய்வளிக்கின்றது. இதன் அர்த்தம் உடலுக்கு ஓய்வளிப்பதாகும். சிலவேளைகளில் ஓய்வு மட்டுமே தேவையான மருந்தாகும்.

15. சாந்தமும், சகிப்புத் தன்மையும் ஓர் அறையின் குளிரூட்டி போல் செய்யபடுகின்றன. அவை மனிதனின் செயல் திறனை அதிகரிக்கச் செய்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. கவலைப்படும் குற்றவாளி தூக்குமேடைக்குச் செல்ல முன்னர் பலமுறை இறக்கின்றான்.

17. தன்னுடைய கோபத்தை அழிக்க முடியாத ஒரு மனிதனால் எவ்வாறு சுய கட்டுப்பாடு இல்லாதவர்களை விமர்சிக்க முடியும்?

18. வெற்றி, சாந்தமான மனதிலிருந்தே ஊற்றெடுக்கின்றது. குளிர்ந்த இரும்பை வெட்டி வளைக்கிறது.

19. பயத்தை அகற்றும் இலகுவான வழி ஞானத்தைக் தேடிப் புரிந்து கொள்வதாகும்.

20. அமைதிக் காந்தமாக இருங்கள். அமைதியற்ற ஆத்மாக்களை உங்களால் கவர்ந்திழுக்க முடியும்.

21. செல்வத்தை இழந்தால் எதனையும் இழக்கவில்லை. ஆரோக்கியத்தை இழந்தால் – சிலதை இழந்து விட்டீர்கள், ஒழுக்கத்தை இழந்தால் – அனைத்தையும் இழந்துவிட்டீர்கள்.

22. ஒரு தரம் இறைவனை அனுபவம் செய்துவிட்டால், அதன் பின்னர் அவரை விட சிறந்த ஒருவரைத் தேட வேண்டியதில்லை.

23. பிறப்பின் முடிவு இறப்பு, இறப்பின் முடிவு பிறப்பு.

24. ஒரு மனிதன் தனக்குள்ளே அமைதியைக் காணாவிட்டால் இந்த உலகில் அமைதி இருக்க முடியுமா?

25. நம்பிக்கையற்ற மனிதனுக்கு அமைதி இருக்காது, மனதில் அமைதியற்றவனுக்கு எவ்வாறு மகிழ்ச்சி இருக்க முடியும்?

26. இறைவனுக்கு பரந்த முதுகுண்டு. உங்களிடம் சுமையிருந்தால் அவர் உங்களிடம் இருந்து அதை எடுப்பதற்கு அனுமதியுங்கள்.

27. மௌனம் என்பது சத்தமில்லாமல் இருப்பது மட்டுமல்ல, அத்துடன் மனதை நிலைப்படுத்தி வைப்பதுமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. புகழ்ச்சியில் நான் களிப்படைந்தால், இகழ்ச்சியால் எளிதாகத் தாக்கப்படுவேன் என்பது அர்த்தமாகும்.

29. நீங்கள் சுதந்திரத்தின் விதிமுறைகளை ஏற்றுக்கொண்டால் மட்டுமே உங்களை நீங்கள் சுதந்திரமானவர் என்று அழைக்க முடியும்.

30. உங்கள் சிந்தனையை வகைப்படுத்துவதற்கும், இறைவனை நினைப்பதற்கும், தினசரி காலையில் சில கணங்களைச் செலவு செய்ய முடியுமானால், உங்கள் நாள் அற்புதம் நிறைந்ததாக இருக்கும்.

31. கோபத் தீயினால் நீங்கள் எரியும் போது ,அதன் புகை உங்கள் கண்களில் புகுந்து விடும்.

32. நீங்கள் எந்தளவிற்கு ஊகிக்க முயற்சி செய்கின்றீர்களோ, அந்தளவிற்கு அமைதி குறைந்து விடுகின்றது.

33. விவேகத்தைப் பயன்படுத்தும் பொழுது சக்தி மிகக் குறைந்தளவே தேவைப்படும்.

34அமைதியைத் தேடியடைவது மிகவும் கடினமானது, ஏனெனில் அது உங்களுக்குள்ளேயே உள்ளது.

35. மூடன் ஒருபொழுதும் திருப்தியடைவதில்லை ஆனால் அறிவாளியோ திருப்தியில் செல்வத்தை காண்கின்றார்.

36. நீங்கள் கோபப்படும்போது , கோபத்தினால் உங்களுக்கு ஏற்படும் இழப்பானது உங்கள் கோபத்தை விட அதிகமானதாகும்.

37. சாந்தமாக இருப்பவரை உங்களால் முட்டாளாக்க முடியாது.

38. தனிநபர்களின் மனங்களில் உள்ள ஒற்றுமை, சமுதாய ஒற்றுமையில் பிரதிபலிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39. சில விடயங்களையிட்டு நீங்கள் ஆச்சரியம் அடைவீர்களாயின், நீங்கள் மிக எளிதாகக் குழப்பம் அடைவீர்கள்.

40. நிஜமான உஷ்ணக் கட்டுபாடு என்பது கோபத் தீயை அணைப்பதாகும்

41. ஆயுதங்கள் தாமாகவே ஆபத்தானவையல்ல. மனிதரில் இருக்கும் கோபமே தீங்கு விளைவிக்கும்.

42. மனித மனங்களில் தான் யுத்தம் பிறக்கின்றது என்பதை உணர்வோமாயின் மன அமைதிக்காக நாம் பெரும் முயற்சிசெய்வோம்.

43. நான் அமைதியை ஆதரிக்கின்றமையால் அதற்காக கத்திக் கூச்சலிட வேண்டுமா?

44. கற்பனை மூர்க்கத்தனமான சிங்கத்தைப் போன்றது. அதைக் கட்டுக்கடங்காமல் ஓடவிடாதீர்கள்.

45. நீங்கள் பதில்களைத் தேடும் போது எப்போதும் ஆச்சரியங்களுக்கும் தயாராக இருங்கள்.

46. முட்களின் மத்தியில் வாழும் ரோஜா அந்த முட்களால் காயப்படாமல் இருக்கின்றது. நீங்கள் எப்படி.

47. கோபம் உங்களைப் பைத்தியமாக்கின்றது நீங்கள் ஏன் விவேகியாக இருக்கக் கூடாது.

48. கோபம் அடைகின்ற மனிதன் உண்மையில் தன்னுடனேயே கோபம் அடைகின்றான்.

49. நீங்கள் குறைவாகப் பேசும் போது மற்றவர்கள் நீங்கள் கூறுவதை அதிகமாக செவிமடுக்கின்றார்கள்.

50. நீங்கள் எப்போதும் உங்களால் முடிந்தளவு திறமையாகச் செய்தால் வருந்துவதைத் தவிர்க்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பு

அன்பே சக்திவாய்ந்ததோர் உந்துசக்தியாகும். அது நம்மை மிக உயரத்துக்கு எடுத்துச் சென்று இலேசாகவும் காற்றுப்போலவும் ஆக்கிவிடும் எனினும் இது தான் மிகவும் தவறுதலாகத் துஷ்பிரயோகம் செய்யப்படும் சக்தியாகும். அன்புக்காகப் பல தரங்குறைந்த செயல்கள் இடம் பெறுகின்றன.

இப்போது உலகிற்குத் தேவை அன்பு, இனிமையான அன்பு என்று இரு பிரபல்யமான பாடல் கூறுகின்றது உலகிற்கு உண்மையிலே தேவைப்படுவது அன்பைப்பற்றிய சரியானதும் நுட்பதிட்பமுமானதொரு விளக்கமேயாகும். உண்மையான அன்பான புரிந்துணர்வு பரஸ்பர நம்பிக்கை மரியாதை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டதேயன்றி மனக்கிளர்ச்சிகளை அல்ல.

அன்பு சமநிலையுடையது அதாவது தன்னிடமும் கடவுளிடமும் தன்னைச் சார்ந்தவர்களிடமும் இசைந்திருப்பது அன்பு சுயநலமற்றது அன்பு விநோதத்திற்கும் சலனத்திற்கும் கட்டுப்பட்ட மனக்கிளர்ச்சி நிலை அல்ல ஆனால் உடல் உருவங்களுக்கு அப்பாற்பட்டுச் செல்லும் மேம்பட்டதோர் உணர்வுநிலையாகும் அன்பு உடல் சம்பந்தப்பட்டதல்ல அன்பு ஆத்மாவின் உயிர்நாடி எங்கள் அன்பு எங்களைச் சுற்றி வெளியே பாய்ந்தோட வேண்டும். எப்போதும் புத்துணர்ச்சியுடன் இருப்பதுடன் இரக்கம் உள்ளவர்களாகவும் கவர்ச்சியாகவும் ஆரோக்கியமாகவும் இருப்போம்.

அன்பு இல்லாவிடின் வாழ்க்கையின் பொக்கிஷங்கள் யாவும் எமது பார்வைக்கும் அனுபவத்துக்கும் இல்லாமல் பூட்டப்பட்டுவிடும். ஏனெனில் உண்மையிலேயே அன்பு தான் திறவுகோலாகும்.

## அன்பான நாளுக்கான சிந்தனைகள் –செவ்வாய்க்கிழமை

01. யாராவது உங்களுடன் கோபத்துடன் பேசினால் அன்பெனும் குளிர்ந்த நீரை அந்த நெருப்பில் ஊற்றுங்கள்.

02. வாழ்க்கையின் ஒவ்வொரு சூழ்நிலைக்கும் முகம் கொடுக்க வேண்டும் அப்படியாயின் ஏன் அதற்கு அன்புடன் முகம் கொடுக்கக்கூடாது?

03. எப்போதும் பணிவு என்னும் ஆடையை அணிந்திருங்கள் அதனால் நீங்கள் மற்றவர்களின் அன்பையும் ஒத்துழைப்பையும் பெறுவீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. அன்பாகவும் அதேவேளை கண்டிப்பாகவும் என்னால் இருக்க முடியாவிட்டால் நிச்சயமாக என்னில் சில சக்திகள் குறைவாக உள்ளன உங்களையே நீங்கள் பரிசோதித்து அதை நிரப்பிக் கொள்ளுங்கள்.

05. பொறாமையான அல்லது வெறுப்பான சிந்தனைகள் வந்து சேரும் போது மகிழ்ச்சியை இழந்து விடுகின்றோம் அன்பும் நல்லாசிகளும் நிறைந்த சிந்தனைகள் துக்கத்தைத் தீர்த்து வைக்கின்றன.

06. மரியாதையைப் பெறும் ஒரே வழி அதனை முதலில் கொடுப்பதாகும்.

07. உங்கள் சொந்த சுபாவத்தைத் தலிர வேறு எவரும் உங்களைச் சித்திரவதை செய்வதில்லை ஆகவே உங்கள் சுபாவத்தை இனிமையாகவும் அன்பாகவும் ஆக்கி எல்லோருடைய அன்பையும் வெல்லுங்கள்.

08. உங்களது சொந்த வெற்றியினைப் போன்றே மற்றவர்களின் வெற்றியிலும் ஆர்வமாக இருங்கள்.

09. அன்பாகவும் உண்மையாகவும் இனிமையாகவும் பேசுவதற்கு ஒரு சதமேனும் செலவழிக்க வேண்டியதில்லை.

10.நீங்கள் தனிமையாக இருந்தால் பெறுமதியற்றவர் ஆனால் மக்கள் மத்தியில் அன்பானவராகவும் இனிமையானவராகவும் ஒத்துழை ப்பவராகவும் இருந்தால் பெறுமதி மிக்கவர் ஆவீர்கள்.

11. அன்பான ஒரு வார்த்தையானது பலரின் வேதனைமிக்க இதயங்களைக் குணமாக்க வல்லது.

12. எல்லோருக்கும் மதிப்புக் கொடுப்பத என்ற சாதகமான பதிவுகள் உங்களிடம் கட்டாயம் இருக்க வேண்டும்.

13.எனது உண்மையான இயல்பு அன்பு செலுத்தவதே என்பதை நான் அறிந்து கொண்டால் பொறாமை இருக்க முடியாது.

14. இறைவன் எம்மை நறுமணமுள்ள மலராக்குகின்றார் நான் இனிமையை எல்லோருக்கும் பரப்புகின்றேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. எளிமையின்றி ஒருவரால் பிறரது உண்மையான அன்பைப் பெற முடியாது.

16. இது ஒரு பித்துப் பிடித்த உலகம். ஆனால் இறைவனின் அன்பில் பித்தாக இருப்பது ஒரு நல்ல உணர்வாகும்.

17. பிறரிடம் அன்பும் கருணையும் காட்டுவது ஒரு வகைத் தர்மமே.

18.சுய மரியாதையும் இறைவன் மீதான அன்பும் எம்மிடம் உள்ளபோது பிறரைப்பாராட்டுவது இலகுவானதாகின்றது.

19. நாங்கள் அனைவரும் மனித இனத்தவர் என்று கருதுகின்றோம். ஆம் நாங்கள் மனிதர்களாக இருக்கின்றோம். ஆனால் எம்மிடம் எவ்வளவு மனித நேயம் உள்ளது.

20. ஒருவர் எவ்வளவு தான் தீயவராக இருந்தாலும் குறைந்தது ஒரு நற்பண்பையேனும் கொண்டிருப்பார். வானம்பாடியைப் போலாகி நற்குணங்களின் இனிமையைச் சேகரியுங்கள்.

21. ஒவ்வொருவரும தான் தனது அயலவனைவிடச் சிறந்தவன் என்று உணர்கின்ற போது தேசத்தில் ஐக்கியம் இருக்குமா?

22. இறைவன் பாவிகளிடத்தும் அன்பாக இருக்கின்றார் எல்லோரும் இறைவனின் ஒரு குழந்தையை வெறுப்பதற்கு எனக்கு என்ன உரிமை இருக்கின்றது?

23. எந்தவொரு வேலையையும் அன்புடன் செய்வோமானால் அதில் உடனடி வெற்றி கிட்டும்.

24. நீங்கள் அதிக அன்பைக் கொடுக்கும் பொழுது அதிக அன்பைப் பெறுவீர்கள் நீங்கள் அதிகளவு அன்பை வைத்திருக்கும் போது அன்பை இலகுவாகக் கொடுக்கக்கூடியதாக இருக்கும்.

25. எல்லாவற்றின் அழகும் அவற்றை நீங்கள் பாராட்டும் திறனிலேயே தங்கியிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26.நான் சிலரைத் தோலின் நிறத்திற்காகத் தவிர்த்தால் அது ஒருமனிதன் அணிந்திருக்கும் ஆடையைப் பார்த்து அவரை வெறுப்பதற்கு ஒப்பாகும்.

27. எல்லோருக்கும் துணை தேவை. ஒருவருடன் எனது தோழமையைப் பகிர்ந்து கொள்ள என்னிடம் போதியளவு அன்பு இருக்கின்றதா?

28. நீங்கள் யாரையாவது நேசித்தால் நீங்களும் அவர் போல் இருக்க முயற்சி செய்வீர்கள். நாங்கள் இறைவனை நேசித்தால் நாங்களும் தெய்வீகமாக இருக்க முயற்சிக்க வேண்டாமா?

29. அன்பு உலகளாவியது அதற்கு எல்லைகள் இல்லை.

30. இறைவனின் அன்பு உங்களை முழு இனத்தின் மீதும் அன்பு கொள்ளச் செய்வதுடன் எவரையும் வெறுக்க வைக்காது தனிப்பட்ட ஒருவரின் அன்பு அந்த ஒருவரை மட்டும் நேசிக்கவும் பலரை வெறுக்கவும் வைக்கும்.

31. நீங்கள் அநாதியான விதிமுறைகளைப் பின்பற்றினால் எவ்வாறு அன்பு செலுத்துவது என்பதைப் புரிந்து கொள்வீர்கள்.

32. புண்படுத்தும் அன்பு – அன்பேயல்ல.

33. வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாதபோது நெருங்கிய நண்பர்களை இழக்க நேரிடும்.

34. எல்லோரையும் சமமாக நேசித்து சமத்துவமான வாழ்க்கையை அனுபவம் செய்யுங்கள்.

35. இருவரில் ஒருவர் விரும்பாத போது இருவர் சண்டையிட முடியாது.

36. நாங்கள் எதை நேசிக்கின்றோமோ அது போல் உருவாகி நாகரிகமடைந்துள்ளோம். நீங்கள் இறைவனை நேசிக்கும் போது என்ன நடக்கின்றது என்று பாருங்கள்.

37. பிறருக்கு எவ்வளவு நன்மை செய்கின்றீர்களோ அவ்வளவிற்கு நீங்கள் உங்களுக்கே நல்லதைச் செய்கின்றீர்கள். தினமும் உங்களுக்கு நல்லவராக இருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

38. இறைவனுடன் அன்பாக இருப்பது மனித இனத்தையே நேசிப்பதாகும்.

39. சிலவேளைகளில் நீங்கள் மக்களுக்கு உதவிக்கரம் நீட்டும் போது அவர்கள் அதனை உதாசீனப்படுத்தி விடக்கூடும். உங்களுடைய எண்ணங்கள் மூலம் அன்பையும் கருணையையும் கொடுங்கள்.

40. பெருந்தன்மையான ஓர் இதயம் விரைவில் மிகவும் பெறுமதி வாய்ந்ததோர் இதயம் ஆகிவிடும்.

41. எதிரிகளை இல்லாதொழிப்பதற்கான சிறந்த வழி அவர்களை நண்பர்களாக்கிக் கொள்வதாகும்.

42. உங்கள் மீது அன்பு செலுத்தக் கற்றுக்கொள்வது ஏனையோரின் வெறுப்பிலும் இருந்து உங்களை விடுவிக்கும்.

43. நீங்கள் நீங்களே! ஆகவே உண்மையான சுயமாக இருப்பதை இரசியுங்கள்.

44. எல்லோரையும் உங்களின் சகோதரர்களாகப் பார்த்தால் அன்பாக இருப்பது எளிதாகிவிடும்.

45. அன்பையும் கவனிப்பையும் எதிர்பார்க்காதீர்கள் மாறாக அவற்றையும் கொடுங்கள்.

46. அன்புக் கண்ணீர் துன்பம் தராது – அவை முத்துக்களாக மாறிவிடும்.

47. அன்பிற்கும் உடம்பிற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்பது உங்களுக்குத் தெரியுமா?

48. கசப்பான உலகத்திலே ஒரு துளி உண்மையான அன்பு பாலைவனத்தில் ஒரு கடல் போன்றதாகும்.

49. அன்பு ஒரு மகா சக்தி – ஆனால் தூய அன்பைக் கொண்டிருப்பதற்குச் சக்தி தேவை.

50. பொறாமை அதன் அவலட்சணமான தலையைத் தூக்கும் போது நாங்கள் நேசிப்பவர்களும் எங்கள் எதிரிகளாகி விடுகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சக்தி

வெண்ணிறத் தொப்பிகளுடன் பனி மூடிய மலைகள் போல் உயர்ந்த நிற்கும் அலைகளை உற்றுப் பார். அவை கிரீடங்களுடன் மேலெழுந்த முன்னேறுகின்றன. அவை தூய்மையினதும் சக்தியினதும் கிரீடங்களே ஆகும். அவை கம்பீரமான அதிபதிகள்.

அவற்றின் அசைவுகளைப் பாருங்கள் இறுக்கமற்றவை தமது பாதையில் உள்ள பொருட்களால் அவை மங்கலாகவோ அல்லது பிரகாசமாகவோ பெரியதாகவோ அல்லது சிறியதாகவோ இருந்தாலும் பாதிக்கப்படாதவை களைப்பற்றவை தடைகள் எனும் வார்த்தைகளையே அறியாதவை.

சிலயுத்தங்களில் தோற்றுப் போனாலும் மகாயுத்தம் வெல்லப்படும் என்ற நம்பிக்கையைக் கொண்டிருத்தலே சக்தியாகும் வெற்றியாளர்கள் சில சமயங்களில் இலக்கானது வெகு தொலைவிலும் மிக உயரத்திலும் காணப்பட்டாலும் இலக்கை அடைந்தே தீருவது என்ற உறுதி பூரணப்பட்டிருக்கும் மன உறுதிமிக்க எதையும் கவரவோ அல்லது திசைதிருப்பவோ முடியாது பயமற்றிருப்பதால் சந்தேகம் எனும் பலவீனமான எண்ணங்கள் இருப்பதில்லை. தைரியம் மிக்க போராளியாக உள்ளும் புறமும் உள்ள தூய்மையற்றவற்றை அழிக்கவல்லது நான் சர்வ சக்திவான் இறைவனின் குழந்தை எனும் உணர்வில் உறுதியாக இருப்பதுடன் இந்த அதிகாரத்தினைக் கோருவதற்குரிய உரிமையுடைய கீழ்ப்படிவுள்ள குழந்தையாக இருத்தலாகும்.

### சக்தி வாய்ந்த நாளுக்கான சிந்தனைகள் – புதன்கிழமை

01. பலர் கோபத்தை ஓர் ஆயுதமாகக் கையாளுகின்றனர். பணிவை உங்கள் கவசமாகச் கொண்டு பாதுகாப்பை அனுபவம் செய்யுங்கள்.

02. ஒவ்வொருவருக்கும் நடிப்பதற்கென்று தனித்துவமான பாகம் உண்டு என்பதை உணர்வீர்களாயின் சகித்துக்கொள்ளும் சக்தியை விருத்தி செய்வது இலகுவானதாகும்.

03. சகிப்பதற்கு இன்னும் நிறைய உண்டு என்பதை நீங்கள் உணர்வதன் அர்த்தம் நீங்கள் சகித்துக் கொள்வதற்கு இன்னும் முயற்சிக்கின்றீர்கள் என்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04.பெயர், புகழ்ச்சியால் நான் கர்வம் கொண்டால் நிந்தையும் அவதூறும் என்னை அழித்துவிடும்.

05. செயல், செயலின் பின் விளைவு என இரு விடயங்களுண்டு சாதாரணமான செயலாக இருப்பினும் அதன் விளைவு அனுகூலமானதாகவும், ஆக்கபூர்வமானதாகவும், செயல்திறன்மிக்கதாகவும் இருக்க வேண்டும்.

06. நம்பிக்கையும் வெற்றியும் மனதில் இருக்கும் போது காரியசித்தியைப் பெற்றுக் கொள்ளலாம். எண்ணங்கள் பலவீனமாக இருந்தால் தோல்விதான் கிட்டும்.

07. எதையும் தடைக்கல்லாக நோக்காதீர்கள். எல்லாவற்றையும் வெற்றியின் படிக்கற்களாய் பாருங்கள்.

08. நீங்கள் விரும்பும் எண்ணங்களை மட்டுமே குறித்த ஒரு நேரத்தில் கொண்டிருக்க வேண்டும். அதிகமாகவோ அல்லது குறைவாகவோ அல்ல உங்கள் கட்டுப்படுத்தும் சக்தி இவ்வாறாக இருக்க வேண்டும்.

09. நேற்றைய பயன் இல்லாத எண்ணங்களுக்கும் உணர்வுகளுக்கும் செயல்களுக்கும் அவற்றின் அடையாளமேனும் இல்லாதபடி முற்றுப்புள்ளி வைக்கவும்.

10. மனிதன் மொழியின் காற்புள்ளி, முற்றுப்புள்ளிகளை பற்றித் தெரிந்து வைத்திருக்கின்றான். ஆனால் அவனுக்கு எதிர்மறையான எண்ணங்களுக்கு முற்றுப்புள்ளியிடத் தெரியவில்லை.

11. அன்பான கட்டளைகள் விரோதத்தைத் தோற்றுவிக்காத அவை மனிதனை மகானாக்கும்.

12. நீங்கள் செயற்பட்டு எல்லாப் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்குரிய தருணம் இதுவாகும். நொண்டிச் சாட்டுகளுக்கு இணங்கும் தருணம் இது அல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. நீங்கள் கண்டிப்பான பார்வையை உபயோகிக்க வேண்டுமன்றால் அது பரவில்லை. ஆனால் உங்கள் கரங்களை ஒரு போதும் வன் செயலுக்கு உபயோகிக்காதீர்கள் . அது உங்களுடைய பலவீனத்தையே காட்டும்.

14.அச்சம் அடைதல் தனக்கும் பிறருக்கும் ஆபத்தாகும்.

15. இறைவனே எனக்குத் தந்தையாகவும் ஆசானாகவும் வழிகாட்டியாகவும் ( இன்னும் பலவாகவும் ) இருக்கும் போது இந்தப் பூமியில் எதற்கும் நான் அஞ்சலாமா?

16. நாங்கள் எல்லோரும் கட்டாயம் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டும். ஆனால் எப்படி முகம் கொடுக்கின்றோம் என்பதே முக்கியமாகும்.

17. உலகில் பிரச்சினைகள் அதிகரிக்கத்தான் செய்யும். ஆகவே பிரச்சினைகளைக் கையாளக்கூடியவாறு நான் என்னுடைய ஆற்றலைப் பெருக்கிக் கொள்ள வேண்டும்.

18. உங்களைப் புரிந்த கொள்ளாத காரணத்தினால் மக்களால் உங்கள் பக்கம் நிற்கமுடியாத பொழுது இறைவன் உங்கள் பக்கம் நிற்பார்.

19. நான் இப்போது அனுபவிப்பது கடந்த காலத்தின் விளைவாகும். நான் எதிர்காலத்தில் அனுபவிக்க வேண்டியது நான் இப்போது செய்வதிலேயே தங்கியிருக்கின்றது.

20. நான் பலரைச்சார்ந்து இருந்தால், நான் ஏமாறக் கூடிய வாய்ப்புக்களை அதிகமாக்குகின்றேன்.

21. வளர்ச்சி அடையும் போது மாற்றங்கள் தன்னிச்சையானவை. நான் மாற்றத்துக்கு பயந்தால் எப்படி வளர்ச்சியடைய முடியும்?

22. நான் சுய மரியாதையை விருத்தி செய்யாவிடின் இன்னொருவரின் காலடியிலேயே இருப்பேன்.

23. என்னுடைய செயல்கள் யாவும் இறைவனுக்காக என நான் கருதும் போது எல்லாப்பணிகளையும் நிறைவேற்றுவதில் சந்தோசம் இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. நான் இருளுக்கு மிகுந்த பயத்தைக் கொண்டிருந்தால் எனது கண்களை மூடுவதில் எந்த வித அர்த்தமும் இல்லை.

25. இறைவன் எனது சகபாடி என்ற உணர்விலே செயல்களைச் செய்யும் போது சாத்தியமற்றதும் சாத்தியமாகும்.

26. சோதனைக்குரிய நேரமே மனிதர்களை நேர்மையாக்குகின்றது. வெற்றிக்குரிய நேரமல்ல.

27. நீங்கள் உங்களுடைய இதயத்தை இறைவனுக்கு அர்பணித்தால். உங்களுக்கு மாரடைப்பு ஏற்படாது.

28. உங்கள் நேரத்தை மாற்ற முடியாதுவிடினும் இது நீங்கள் மாறுவதற்குரிய நேரம் என்பதை உணருங்கள்.

29. நீங்கள் மற்றவர்களின் காரியங்களை கவனம் செலுத்தும் வழக்கத்தைக் கொண்டிருப்பீர்களாயின் உங்கள் சொந்தக் காரியங்கள் நட்டமடையும்.

30. சிலர் வயதாகுவதையிட்டுப் பயப்பிடுவதாலும் சிலர் பொறுப்புக்களை ஏற்க மறுப்பதாலும் ஒரு பொழுதும் முதிர்ச்சி அடைவதில்லை.

31. ஒரு நேர்மையான மனிதன் அந்நியனின் கண்களுக்கு ஒரு போதும் அஞ்சுவதில்லை.

32. ஓர் அவுன்ஸ் தைரியம் ஒரு தொன் விரக்தியைக் துடைப்பதற்குப் போதுமானது.

33.தன்னை உண்மையாக புரிந்து கொண்ட ஒருவனால் சுயமாக் நிற்க முடியும்.

34. சோம்பேறி எப்போதும் தனது சோம்பேறி தனத்தால் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பான்.

35. உங்களுடன் சம்பந்தப்பட்டவர்கள் தங்களுடைய மனதை மாற்றிக் கொள்ளும் போது உங்களின் மனோ நிலையை நீங்கள் மாற்றாது இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. நெருக்கடிக்கு ஆளாகும் போது தைரியமாக இருப்பதே அதை எதிர்கொள்ளும் சிறந்த வழியாகும்.

37. வாழ்க்கையின் மிகப்பெரிய கேள்வி மரணமாகும். மரணத்திற்கான பதில் வாழ்க்கையாகும்.

38. கடவுள் மீது நம்பிக்கை என்பதன் அர்த்தம் பயமின்றி இருப்பதாகும்.

39. நல்ல பேச்சாளராக ஆகுதற்கு எவராலும் கற்றுக்கொள்ள முடியும். ஆனால் தாங்கள் வாழும் முறையிலிருந்து மற்றவர்கள் கற்றுக்கொள்ளக்கூடியவாறு எத்தனை பேர் வாழுகின்றார்கள்.

40. பலவீனமானதும் சோம்பலானதுமான மனதால் சக்தி மிக்க எண்ணங்களை உருவாக்க முடியாது.

41. உண்மையான சுதந்திரம் என்பது சாக்குப் போக்குகளிலும் சாராது இருப்பதாகும்.

42. சுய கட்டுப்பாடு உங்களுக்கு எல்லையற்ற கட்டுப்பாட்டைத் தரும்.

43. எப்போதும் மாற்றத்துக்கான வாய்ப்புக்கள் உள்ளன. ஆனால் உங்களின் மாற்றத்திற்குரிய நேரத்தை ஏற்படுத்தி விட்டீர்களா?

44. உங்கள் வழியில் தடை வந்தால் அழுவதை நிறுத்தி முயற்சியை ஆரம்பியுங்கள்.

45. அனர்த்தங்களின் மத்தியிலும் புன்னகை புரிவது உறுதியான மனத்தினை எடுத்துக்காட்டும்.

46. மக்கள் உங்களை மடையனாக்கினால் பணிவிலும், மௌனத்திலும் பெரும் விவேகம் இருப்பதை ஞாபகத்தில் கொள்ளுங்கள்.

47. உங்களுடைய குப்பைகளை நீங்கள் இறைவனிடம் கொடுத்தால் எவரும் தமது குப்பைகளை உங்கள் மீது வீசமாட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

48. ஒரு போதும் நம்பிக்கையை இழக்காதீர்கள். நம்பிக்கை தான் வாழ்க்கை முழுவதும் உங்களை ஊஞ்சலாட்டும் கயிறாகும்.

49. சிலர் அதிகம் சிந்திக்கின்றனர். அதிகம் பேசுகின்றனர். ஆனால் செய்யும் வேளையில் பின்வாங்கி விடுகின்றனர்.

50. நிறுத்தற் குறிகளை தாளில் இடுவது எளிது. ஆனால் உங்களால் வீணான எண்ணங்களுக்கு முற்றப்புள்ளியை இட முடியுமா?

## ஞானம்

இப் பௌதீக உலகில் வாழ்வதற்கு கல்வி முக்கியமானது. ஆனால் வாழ்க்கையில் வெற்றியடையவும், வாழ்க்கையில் ஒவ்வொரு கணத்தையும் புதிதாக அனுபவிக்கவும், தினமும் ஆசீர்வாதமும், உயர்ச்சியும்.
உள்ள நாளை அனுபவிக்கவும் அத்துடன் நிலையான அமைதியைப் பெறவும் முதலில் தன்னைப் பற்றிய ஞானம் அதிமுக்கியமானதாகும்

உன்னையே நீ அறிவாய் என்று கூறப்பட்டுள்ளது. இந்த முயற்சியில் அநாதைகள் பலர் லௌகீகப் பெற்றோரைக் கண்டடைவதற்கு அல்லது அவர்களின் சிறு சாயலையாவது கண்டு கொள்வதற்கு மிகவும் நீண்டதும் கஷ்டமானதுமான தேடுதல்களை மேற்கொள்கின்றார்கள். மேலும் தமது மூலம் எது என்ற தேடுதல்களில் அந்நிய முகங்களுக்கிடையே பரந்ததுமான விரிந்ததுமான அதி கூடிய செலவுடையதுமான பிரயாணங்களை மேற்கொள்கின்றார்கள்.

எவ்வாறாயினும் இன்று உலகக் குழந்தைகள் அநாதைகள் ஆகிவிட்டனர். அவர்கள் தங்கள் தந்தையையும் மறந்து விட்டனர். தங்களையும் மறந்து விட்டனர். அழிவற்ற ஆத்மாவான தன்னைப்பற்றிய ஞானமே உண்மையாகும். ஆன்மீக விடயங்களை அலசிப் பார்த்து தன்னையும் உணர்ந்து அனுபவம் செய்வதே உண்மையான உயர்ந்த கல்வியாகும்.இறைவன் ஞானக்கடல் இறைவனை அறிவதன் மூலம் நீங்கள் அனைத்தையும் அறிந்தவராகுவீர்கள்.

### ஞானம் நிறைந்த நாளுக்கான சிந்தனைகள் – வியாழக்கிழமை

01. மற்றவர்களுக்காகக் காத்திருக்கும் பழக்கம் உங்களுக்கிருந்தால் நீங்கள் பின்தங்கிவிடுவீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02.நீங்கள் பயனுள்ள செயலுக்காக ஒரு மணிநேரத்தைச் செலவிட்டால் ஆயிரம் மடங்கு இலாபம் உண்டு பிரயோசனமற்ற செயலுக்காக ஒரு மணி நேரத்தை வீணாக்கினால் ஆயிரம் மடங்கு நட்டமடைவீர்கள்.

03.கவனக்குறைவினால் பிழைகள் ஏற்படுகின்றன பின்னர் பதற்றம் ஏற்படுகின்றது.

04. உண்மையான சக்தியும், அதிகாரமும் என்பது தன் மீதான சக்தியும் அதிகாரமுமே அன்றிப் பிறர் மீதானது அல்ல.

05.ஒரு சிறிய உப்புக்கட்டியைக் கண்டெடுத்த சுண்டெலி தன்னை ஒரு பலசரக்கு வியாபாரியாக நினைத்துக் கொண்டதாம்.

06.எந்தப் பணியையும் செய்ய ஆரம்பிப்பதற்கு முன்னர், ஒரு கணம் அதன் விளைவைப்பற்றிச் சிந்தித்த பின்னர் அதைச் செய்ய ஆரம்பிக்கவும்.

07. தேவைக்குப் பணம் சம்பாதிப்பது நல்லது ஆகவே வெறியாகக்கூடாது.

08. உங்கள் நேரத்தை மிகச்சிறந்த முறையில் பயன்படுத்துவதற்குப் பெரும்சக்தியும் தேவையாகும் ஆகவே கற்பனா சக்தியும் சமயோசித புத்தியும் உள்ளவராக இருங்கள்.

09. எப்போதும் என்னைப் பிறருடன் ஒப்பிடுவேனாயின் ஆணவத்தால் அல்லது பொறாமையில் வருந்துவேன்.

10. நல்ல புத்தகங்கள் நல்ல துணைவர்கள் போன்றவையாகும் ஒழுக்கக்கேடான புத்தகங்கள் மனதை மாசுபடுத்தித் தவறான பாதைக்கு இட்டுச் செல்லும்.

11. எத்தகைய பிரச்சனைகளாயினும் குழப்பம் அடையாதீர்கள் நீங்கள் சித்தியடைய வேண்டிய பரீட்சைகளாகக் கருதி அவற்றுக்கு முகம் கொடுங்கள்.

12. எமது வாழ்க்கையைப் பாழாக்கியவை நான் எனது நீர் உமது என்பவையே அவற்றை மறந்துவிடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. ஞானமே செல்வம் என்றால் உங்களைக் கேட்டுப் பாருங்கள் நான் எவ்வளவு செல்வந்தன்?

14. உங்களுடைய வாயிலிருந்து கீழ்த்தரமான வார்த்தைகள் வந்தால் உங்களுடைய மனம் எப்படிப்பட்டதாக இருக்கும்?

15. உங்களை மதிப்பிடுவது உங்கள் செயல்களேயின்றி நீங்கள் பேசும் மேன்னையான வார்த்தைகள் அல்ல.

16. இறப்பதற்குப் பயன்படுவதன் அர்த்தம் நீங்கள் வாழ்க்கையின் முக்கியத்துவத்தை விளங்கிக் கொள்ளவில்லை என்பதாகும்.

17. உங்களுடைய உரிமைகள் பற்றி மட்டுமே அக்கறைப்படாதீர்கள் நீங்கள் சரியா, பிழையா என்பது பற்றியும் ஆலோசியுங்கள்.

18. உலகிலுள்ள கல்விகளை அதிகம் கற்கும் போது ஆணவம் அதிகரிக்கலாம் ஆன்மீகக் கல்வி மேலும் பணிவைத் தருகின்றது.

19.பிரச்சினை பற்றி நான் எவ்வளவு கவலைப்பட்டாலும் எனது கவலைப்படும் மனதால் ஒரு தீர்வை அடைய முடியமா?

20. வாழ்க்கை என்பது நேரம் நேரத்தை வீணாக்குவது வாழ்க்கையே வீணாக்குவதாகும்.

21. இன்னொருவரை விமர்சித்த உங்கள் சுட்டுவிரலைக் காட்ட முன் உங்க் விரல் நகத்தில் எவ்வளவு அழுக்குப் படிந்துள்ளதெனப் பாருங்கள்.

22. இப்போதே பேராசையை வெற்றி கொள்ள முயற்சியுங்கள் ஏனெனில் மனிதன் முதுமை அடைய அவனுடைய பேராசை இளமை அடைகின்றது.

23. மனிதன் இறைவனிடம் சரணடையும் போது தனத மனதை இறைவன்பால் திருப்பி அவருடைய அறிவுரைகளுக்கமைய செயல் புரிகின்றான்.

24. விண்மீண்களையும் கடலின் ஆழத்தையும் நன்றாக ஆராய்கின்றோம் நாங்கள் யார் நாம் இங்கிருக்கும் காரணம் யாது? என்பது பற்றி எவ்வளவு அறிந்துள்ளோம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. சிலவேளைகளில் நாங்கள் பிறர் எப்படி இருக்க வேண்டும் என்று விரும்புகின்றோமோ அப்படியே அவர்கள் இருப்பதற்காக அவர்களை மாறும்படி வற்புறுத்துகின்றோம்.

26. சிலவற்றை விளங்கிக் கொள்வதற்கு உங்களுக்கு ஞானம் தேவை ஆனால் உணர்வதற்கு உங்களுக்கு அனுபவம் தேவை.

27. எதையுமே செய்யாமல் இருந்து பழகி விட்டால் சுறுசுறுப்பாக இருப்பதற்கு நேரம் இருப்பதில்லை.

28. மிக முன்னேற்றமடைந்த மனிதனை விலங்கிலிருந்து வேறுபடுத்துவது யாது? அவனுடைய எண்ணங்களே.

29. எண்ணங்களின் தராதரமே ஒருவரின் தனிப்பட்ட சந்தோஷத்தினை நிச்சயிக்கின்றது.

30. நான் கடந்த காலத்தைப் பிடித்துக் கொண்டிருந்தால் நிகழ்காலம்சிரமமாகுகின்றது எதிர்காலமும் சாத்தியமற்றதாகப் புலப்படுகின்றது.

31. குடும்ப வன்முறைகள் வீதியில் இரத்தம் சிந்த வைக்கும்.

32. உள்ளத்தில் கலக்கம் இருந்தால் வெளியில் எல்லாமே குழப்பமாகத் தோன்றும்.

33. நீங்கள் பேசும் வார்த்தைகளில் எத்தனை கடவுளைப் பற்றியது?

34. தற்பொழுத உங்களிடம் உள்ளதையே உங்களால் பாராட்ட முடியாவிடின் எதிர்காலம் தனது களஞ்சியத்தில் வைத்திருப்பதை எப்படி உங்களால் மதீப்பீடு செய்ய முடியும்?

35. எது முக்கியமானது? உங்கள் வாழ்க்கைத் தரமா? அல்லது சரியான தரத்துடன் வாழும் வாழக்கையா?

36.குருடராக இருப்பது என்றால் இருட்டில் இருப்பது என்று அர்த்தமல்ல.

37. ஒருவரது ஒழுக்கம் கண்ணாடியில் தெரிவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

38. கவனமாக இருங்கள்! உங்கள் ஒவ்வொரு கூற்றும் ஒவ்வொரு முத்திரையைப் பதித்தது விடும்.

39. மறக்கப்பட்ட வாழ்க்கைப் பாடங்கள் பற்றியே அநேகமாக நினைவுகள் ஏற்படுகின்றன.

40. உங்கள் முயற்சியை முறியடிக்கும் வரை இறுதிப் பெறுபேறு வெளிவராது.

41. வாழ்க்கை என்னும் மரத்தினை விளங்கிக் கொள்கின்றீர்களா? அல்லது வெறுமனே அதன் கிளைகளின் கீழ் நிற்கின்றீர்களா?

42. குழந்தையைப் போல் கள்ளங்கபடமற்றவர் எனச் சொல்வதுண்டு இந் நாட்களில் நாம் என்ன சொல்ல முடியும்.

43.உங்களிடம் அதிக நேரம் கைவசம் இருந்தால் எதையும் கையாள்வது சுமையாகிவிடும்.

44. நீங்கள் விழித்தெழுந்த பின்பே உறங்கியதை உணர்வீர்கள்.

45. தடிகளும் கற்களும் எலும்புகளை முறிக்கின்றன சொற்கள் அநேகமாக உறவுகளை முறிக்கின்றன.

46. மிக எளிதான வேலையும் சோம்பேறிக்குச் சிரமமாக இருக்கும்.

47. நீங்கள் கடந்த காலத்திலேயே வாழ்வீர்களாயின் இப்பொழுது உங்களால் எவ்வாறு எதிர்காலத்தைப் பார்க்க முடியும்?

48. பெற்றோரின் நடத்தையே பிள்ளைகளின் கல்வி என்பது ஞாபகமிருக்கட்டும்.

49. ஒரு சந்தர்ப்பத்தை தவறவிட்டால் கண்ணீர் சிந்துவதை விட அடுத்ததையும் தவறவிடாமல் இருக்க பார்வையைத் தெளிவாக வைத்திருங்கள்.

50. பொறுப்புணர்ச்சியே எப்பொழுதும் சுதந்திரத்தின் விலையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூய்மை

ஒரு காலத்தில் நாங்கள் தூய்மை அமைதி அனைத்தும் உடையவராக இருந்தோம் தூய்மையாக இருப்பதன் அர்த்தம் என்ன? நாங்கள் எப்படிச் செயல் புரிந்தோம்? அசுத்தம் எங்களைக் கட்டிப்போடும் சங்கிலி. விவகாரமுள்ளவராக்கும் அசுரர்கள். உணர்ச்சி அற்றவர்களாக்கும் பாம்புகள். அதனால் தாங்கள் அறியாமையிலும் தூக்கத்திலும் முற்றிலும் உணர்வற்றும் இருந்தோம் தூய்மை எங்களுக்கு விடுதலையளிக்கின்றது அது எங்களுக்கு ஞானம் அமைதி மகிழ்ச்சி சக்தி இறைவன் இவற்றிற்கா ன திறவுகோளையும் தருகின்றது.

தூய்மை மதிப்பு மிக்கது மிகவும் அரியது சக்திமிக்கது நாங்கள் அதற்காக மரணிக்க வேண்டும் நாங்கள் எங்கள் பழைய தன்மையை எங்களில் மிகப் பெரும் பாகமாகிவிட்ட பழைய தீய குணங்களை – குறிப்பாகக் காமம் கோபம் பற்று பேராசை அகங்காரம் ஆகிய ஐந்தையும் அழிக்க வேண்டும்.

தூய்மையின் ஒளியானது எங்களை நிறம் பால் சாதி சமய நம்பிக்கைகள் போன்ற எல்லைகளுக்குட்படுத்தாத தூர நோக்குடன் ஒவ்வொரு மனிதரையும் சகோதரராக அனுபவம் செய்விக்கவல்லது. தூய்மையின் வல்லமையியானது தீவிர உணர்ச்சி கோபம் விவகாரங்கள் ஆகிய நெருப்பை அணைத்துப் பதிலாக தூய்மையான குளிர்ச்சியான அன்பினை மிளிரச் செய்யும் நாங்கள் நிஜமாகவே அன்பினை மிளிரச் செய்து கடவுளுக்கு நெருக்கமானவர்களாக வரமுடியும் என்பது சரியானதே.

## தூய்மையான நாளுக்கான சிந்தனைகள் – வெள்ளிக்கிழமை

01. எல்லாச் செயல்களுக்கும் எண்ணங்களே விதையானவை ஆகவே நல்ல தூய விதைகளையே நான் விதைப்பேன் அப்போது பழங்கள் மிகச்சிறப்பானவையாக இருக்கும்.

02. பொய்மையின் அடிப்படையிலான உறவுகள் சேற்றின் மீது அத்திவாரம் இடப்பட்ட வீடுகளுக்கு ஒப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. நான் உண்மையிலிருந்து எப்போதும் ஒளிந்திருந்தால் நான் பொய்மையின் துணையில் களிப்படைபவனாக இருக்க வேண்டும்.

04. நீங்கள் பார்க்க விரும்பினால் ஒவ்வொருவரினதும் சிறப்பியல்புகளைப் பாருங்கள் நீங்கள் எதையாவது விட்டுவிட விரும்பினால் பலவீனத்தை விட்டு விடுங்கள்.

05. கண்களே ஆத்மாவின் யன்னல்களாயின் நீங்கள் கண்களைச் சுத்தமாக வைத்திருக்கின்றார்களா? அசுத்தமான யன்னல்களாயின் மறைப்பதற்கு ஏதோ உங்களிடம் உண்டு என்பது தான் அர்த்தம்.

06. எனது செயல் விவகாரங்களில் நேர்மை இருப்பின் நான் எதற்கும் அஞ்சவேண்டியதில்லை.

07. தீயதை நினைப்பதும் தீயவற்றுக்குப் பயன்படுவதும் ஒருவரின் புத்தியைத் தீயதாக்கிவிடும்.

08. அன்பின்றி அமைதியில்லை தூய்மையின்றி அன்பில்லை.

09. நல்லொழுக்கங்களும், நற்குணங்களும் இரத்தினங்களை விடப் பெறுமதிமிக்கவை, அவை மனிதனுக்குத் திருப்தியைத் தருகின்றன. தன்னைப் படைத்தவரினதும் பொது மக்களினதும் நேசத்திற்கு உரியவராக்குகின்றன.

10. பாராட்டத் தெரிந்தவரே மிகவும் பாக்கியசாலி பகைமை கொள்பவர் அல்ல.

11. அகங்காரத்திலிருந்து தற் பெருமை பிறப்பது போல பற்றின் விளைவு ஏற்றமாகும்.

12.தெய்வீகக் குணங்களே மனிதனை இறைவனுக்கருகில் கொண்டு வருகின்றன. தீய குணங்கள் மனிதனை இறைவனிடமிருந்த வெகு தூரம் விலகுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13.இரு நற்குணங்களான மென்மையும் பணிவுமே இறைவனுக்கு அருகாமையில் எம்மை நிலைநிறுத்தும்.

14. அகம்பாவமே மக்களின் வெறுப்பிற்குத் தேவையானவற்றை ஆத்மாவிற்குத் தேடிக் கொடுக்கின்றது.

15. கீழ்த்தரமான வார்த்தைகளை உபயோகிப்பது என்றால் எனக்கு வேறு வார்த்தைகளைத் தேர்ந்தெடுக்கும் விவேகம் இல்லை என்பதே அர்த்தமாகும்.

16. இறைவனுடன் சகல உறவு முறைகளையும் அனுபவம் செய்வதானது சகல இச்சைகளுக்கும் அப்பாற்பட்ட நிலையைக் குறிக்கும்.

17. உண்மையும் நேர்மையும் இயல்பாக என்னிடம் இருப்பின் இறைவனின் அன்பும் எளிதாகக் கிடைக்கும்.

18.ஒரு சமூகம் நல்லொழுக்கத்தை இழந்தால் அது எல்லாவற்றையும் இழந்துவிடும்.

19. நல்ல,களங்கமற்ற போட்டியானது ஆரோக்கியமானது ஆனால் பொறாமை உயிராபத்தான நோயாகும்.

20. இறைவன் தெய்வீகக் குணங்களின் கடலாவார். நீங்கள் ஏதாவது தீய குணத்தால் எரிந்து கொண்டிருந்தால் அக்கடலில் மூழ்கி எழுங்கள்.

21. பெயருக்கும் புகழுக்கும் ஆசைப்பட்டு ஆயிரக்கணக்கில் கொடுப்பதை விட ஒரு கைப்பிடி அரிசியை அன்புடனும் நேர்மையுடனும் கொடுப்பது உயர்ந்நதாகும்.

22. மனிதன் வீழ்ச்சி அடையும் போது மரியாதை என்று எதனை அழைப்பது?

23. கண்ணுக்கு ஒரு முக்காடு இட்டால் உங்களால் எதையும் பார்க்க முடியாது, பொய்மையே (Falsehood) மிக மோசமான முக்காடாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. இறைவனின் குழந்தை எனும் அந்தஸ்தைக் கோருவதற்கு எனது எண்ணங்கள் தகுதி வாய்ந்தவையா?

25. விசேட திறமைகளைத் தீயனவற்றிற்குப் பயன்படுதத்தினால் அவை பயனற்றதாகிவிடும்.

26. நல்ல சுத்தமான மனமுடைய மனிதன் மற்றவர்களில் நல்ல பண்புகளையே காண்பான். அசுத்த மனமுள்ள மனிதன் எப்போதும் அசுத்தத்தையெ தேடுகின்றான்.

27. ஒரு மனிதன் தனது உணர்வுகளையே மறைத்தால் அது அவனது உணர்வுகளில் ஏதேனும் பிழை இருக்கின்றது என்பதற்காகவா?

28.மற்றவர்களின் குறைகளை எந்தளவிற்கு நீங்கள் பார்க்கின்றீர்களோ, அந்தளவிற்கு நீங்களும் பாதிப்படைவீர்கள் பலவீனங்கள் தொற்றக்கூடியவை.

29. எங்கள் நற்குணங்களை நாங்கள் மறக்கலாம் ஆனால் இறைவன் ஒருபோதும் மறக்கமாட்டார்.

30. உங்களை மற்றவர்களுக்கு நிரூபிக்க ஏன் முயற்சிக்கின்றீர்கள்? மற்றவர்கள் உங்கள் கள்ளங்கபடமற்ற தன்மையால் அறிவை வளர்த்துக் கொள்ளட்டும்.

31. நாங்கள் வாழ்க்கையில் சிலவேளைகளில் பல முகமூடிகளை அணிகின்றோம் அது எங்களுடைய உண்மைத் தன்மையை அறிவதைக் கடினமாக்கிவிடும்.

32. இன்று நீங்கள் சொல்லும் பொய்யானது மீண்டும் நாளையும் உங்களைப் பொய் சொல்லத் தூண்டும்.

33. உங்களுடைய திறமையும் நற்குணங்களும் தவறாக உபயோகிக்கப்பட்டால் இழப்பை அடைபவர் நீங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34. உண்மை உண்மையேதான்.

35. உங்களுக்குத் தெரியுமென நீங்கள் கூறலாம் ஆனால் அது உங்கள் செயல்களால் தெரிய வரும்.

36. தூய அன்பே அநாதியான உவுகளுக்கு அடிப்படையானது.

37 தூய பண்புகள் கருணை நிறைந்தவை தூய்மையற்றவை அவமானத்தை தேடித் தருகின்றன.

38. நியாயமானவர்கள் ஆகும் போது நீங்கள் பிழைகளிலிருந்து விடுதலை பெறுவீர்கள்.

39. தன்னை அறிவதற்குத் தனக்கே உண்மை உடையவராக இருத்தல் அவசியம்.

40. ஒருவர் எளிமையாக இருக்க வேண்டும் ஆனால் மதிகெட்டவராக அல்ல.

41. உங்கள் மனசாட்சி ஒரு நல்ல நண்பன் அதை அடிக்கடி செவிமெடுக்கவும்.

42.இறைவனின் விருப்பத்தை நிறைவேற்றுவது உங்களுடைய சொந்த விருப்பத்தை நிறைவேற்றுவதாகும்.

43.இறைவனின் குழற்தையாக இருப்பது அவரது நற்குணங்களை வெளிப்படுத்துவதற்காகும்.

44. நீங்கள் பிழையைச் செய்த பின்னர் அதனைச் சரியென்று நிரூபிக்க முயலுவீர்களாயின் காலம் உங்கள் மடமைத்தனத்தைப் பார்த்து நகைக்கும்.

45. நான் எனது மனதிலுள்ள சந்தேகங்களை நிவர்த்தி செய்யவில்லையெனில் அது புற்றுநோயை வளரவிட்டதற்கு ஒப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

46. சிலரது அறிவுரைகள் (advice) உங்கள் வாழ்க்கையில் தீய குணங்களையே அதிகரித்து விடும் (addvice).

47. நீங்கள் நீங்களாய் இயல்பாக இருங்கள் போலியாக இன்னொருவரைப் போல நடிப்பதை விட இது மிகவும் இலகுவானது.

48. உங்கள் எண்ணங்கள் தூய்மையாக இருந்தால் நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் என்பதை எளிதாகச் சொல்ல முடியும் அத்துடன் சொல்வதைச் செய்ய முடியும்.

49. உங்களுடைய நோக்கு மேன்மையானதாக இருப்பின் நீங்கள் தலை நிமிர்ந்து இருப்பீர்கள்.

50. எளிமையில் சிறந்த அழகுண்டு எது எளிமையானதோ அது சத்தியத்திற்கு நெருக்கமானது.

## கருணை

உலகினைப் பொறுத்தவரை மரணதண்டனை பெற்ற கொலையாளி கருணையற்றவன் கொலையாளியைப் பொறுத்தவரை இவ்வுலகம் கருணையற்றது இவ்வாறு மனிதனுக்கு மகிதன் மனித நேயம் அற்றிருப்பது சங்கிலியாகத் தொடர்கின்றது இது மனிதன் தன்னைப் போன்ற பிறிதொரு மனிதனுக்குத் தீர்ப்பு வழங்குவதினதும் செயல் செயல் புரியாமை என்பவற்றிற்குச் செலுத்தப்பட வேண்டிய விலையைத் தானே நிச்சியித்துப் பிறர் மீது நிர்ப்பந்திப்பதினதும் கதையாகும். எக்காலத்திலும் அதற்கு ஒரு விலை செலுத்தப்பட வேண்டியுள்ளது.

இந்நாட்களில் கருணை காட்டுவது பலவீனத்தின் அறிகுறினென உணரப்படுகின்றது இது உண்மை அல்ல மாறாக இது மகதமதான பலம் நோக்கு மற்றும் விவேகத்தின் அறிகுறி ஆகும் கருணையாக இருத்தல் என்பது வெளிப்படையாகத் தோன்றும் நிகழ்வுகள் சான்றுகளுக்கு அப்பாற் சென்று வாழ்க்கையின் சந்தர்ப்பங்களை நுட்பதிட்பத்துடன் புரிந்துணர்வதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணையாக இருப்பது மிகவும் மேன்மையான உணர்வினைக் காட்டுகின்றது அது சமானமல்லாத இழிவான செயல்கள் செய்யப்படினும் நான் புரிந்த கொண்டு மன்னிக்கிறேன் என்று கூறுவதில் நாங்கள் பலமாக இருக்குமளவுக்கு மிக மேலானது .

## கருணை நாளுக்கான சிந்தனைகள் – சனிக்கிழமை

01. யாராவது உங்களை இகழ்ந்தால் அல்லது அவமரியாதை செய்தால் அவர்கள் மீது புன்னகை நல்லாசிகள் என்னும் மலர்களைத் தூவி விடுங்கள்

02. யாராவது உங்கள் மீது கோவப்பட்டுத் தகாதவற்றைக் கூறினால் அக்கணத்தில் ஏன் அவ்வாறு கூறுகிறீர்கள் என வினவுவது எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போன்றதாகும்.

03. நான் மற்றவர்களின் பலவீனங்களை எனது மனதில் வைத்திருந்தால் விரைவில் அவை என்னில் ஒரு பகுதி ஆகிவிடும்.

04. மனம் மற்றவர்களின் பலவீனங்களை எனது மனதில் வைத்திருந்தால் விரைவில் அவை என்னில் ஒரு பகுதி ஆகிவிடும்.

05. உங்கள் முகத்தில் கவலை நிறைந்திருந்தால் நீங்கள் மற்றவர்களையும் கவலையடையச் செய்வீர்கள் இது நல்லதொரு விடயமா?

06. பிறர் பிழை செய்யும் பொழுது அப்பிழைகளை எண்ணாதீர்கள் அவர்கள் அப்பலவீனங்களை அழிக்க நீங்கள் அவர்களுக்கு எத்தனை தடவைகள் ஒத்துழைத்தீர்கள் என அவர்களை எண்ண வைக்கவும்.

07. தவறான புரிந்துணர்வை அன்பினாலும் தூய்மையான எண்ணங்களினாலும் தக்க தருணத்தில் புரிந்துணர்வினை அளிப்பதனாலும் நீக்கிவிட முடியும்.

08. கால் சறுக்கின் குணமடையலாம் நாத்தவறின் அது ஆழமான வடுவை ஏற்படுத்தி விடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. அழகும் பண்பும் எவரையும் கவரும் அழகற்றவருக்கும் தகுதியற்றவருக்கும் உதவுவதே ஓர் அரிய பண்பு.

10. வெளியில் அழுவதை விட உங்கள் மனதிற்குள் அழுவது மிகவும் ஆபத்தானது வெளிக் கண்ணீர் எளிதாக துடைத்து விடக்கூடியது ஆனால் இரகசியமான கண்ணீர் வடுக்களை ஏற்படுத்தும்.

11. பிறரது பேராசையால் இவ்வுலகில் பலர் பசியால் வாடுகின்றனர் பகிர்ந்து கொள்ளத் தெரிந்து கொண்டால் பிரச்சினைகள் தீர்ந்து விடும்.

12. கண்களில் பார்வை இருப்பது பெரும் கொடையாகும் உங்கள் பார்வை மூலம் அன்பை அமைதியை ஆனந்தத்தைப் பிறருக்கு வழங்காதிருப்பதேன்?

13.மற்றவர்களுக்கு எதிராக நீங்கள் போட்டி போடுவதாக ஒரு பொழுதும் உணராதீர்கள் நீங்கள் போட்டி போடுவதாக ஒரு போதும் உணராதீர்கள் நீங்கள் எல்லோருக்கும் உதவுகின்ற உணர்வினைக் கொண்டிருப்பதே மேல்.

14. நீங்கள் ஒரு பிரச்சினையாக இருப்பதை விடுத்து மற்றவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான கருவியாக ஏன் இருக்கக்கூடாது.

15. உங்களுக்குக் கிடைத்த வாய்ப்புக்களை மாற்றுவதை விட கிடைத்த ஒரு வாய்ப்பை மாற்றத்திற்காகப் பயன்படுத்துவது மேலானது.

16.மனதில் முகில்கள் இருந்தால் கண்களில் நீர் பொழியும்.

17. எது அதிக வேதனை தருகின்றது? தவறா,அல்லது தவறை விமர்சிப்பதா?

18. நீங்கள் நோய்வாய்ப்பட்டு ஒரு நோயாளியாக (Patient) இருந்தாலும் ஒரு பொழுதும் பொறுமையை (Patience) இழக்கக்கூடாது.

19.நாங்கள் எதிர்காலம் பற்றிய பயத்தில் மூழ்கிருந்தால் நிகழ்காலம் வழங்கும் வாய்ப்புக்களைத் தவறவிட்டு விடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. தங்களை மறந்த மனித குலத்திற்குச் சேவை செய்பவர்களே எங்கள் மத்தியிலுள்ள இளவரசர்கள்.

21. மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளும் திறமை இல்லாதவர்களுக்குக் கிடைக்கும் முடிவு தான் தனிமை.

22. நாம் பிறருக்குச் செய்யும் உதவியின் அளவு எல்லைக்குட்பட்டது இறைவனுக்கு நெருக்கமாக ஓர் ஆத்மா வர உதவுவதே அவர் பெறக்கூடிய அனைத்து உதவிகளிலும் மிபகவும் மேலானதாகும்.

23.மற்றவர்களின் துரதிர்ஷ்டத்தைக் கண்டு சிரிப்பது உங்கள் சொந்த அறியாமையை வெளிக்காட்டுவதாகும்.

24. சிலவேளைகளில் பொறாமையின் காரணமாக நாங்கள் பிறரைத் தரங்குறைக்க முயற்சிக்கின்றோம். அப்படிச் செய்வது எங்களை நாங்களே தரங்குறைப்பதாகும்.

25. நீங்கள் உங்களைப் பற்றி மிகவும் பெருமைப்பட்டால் மிக விரைவில் நீங்கள் பிறரை நிந்திப்பீர்கள்.

26. நீங்கள் உங்களை மட்டும் கவனித்துக் கொண்டிருப்பீர்களாயின் மற்றவர்கள் உங்களைப் பற்றி அக்கறையற்றவர்களாகி விடுவார்கள்.

27. மனிதன் பற்றிய நிச்சயமானதொன்று அவர்கள் மாற்றம் அடைவதேயாகும்.

28. வாழ்வில் மகிழ்ச்சியைப் பிறருடன் பகிர்ந்து கொள்வதே மிகப்பெரிய சேவையாகும்.

29.மற்றவர்களின் தவறைச் சகித்துக் கொள்வதென்பது ஒரு விடயம் அவற்றை மன்னிப்பது அதைவிட மேலானது.

30. இறைவனின் அழகை ஒருவர் அவதானிப்பின் படைப்பின் அழகை மெச்சுவது எளிதாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. கடவுளை நினைக்கும் போது அமைதியும் மகிழ்ச்சியும் எமது கணக்கில் வரவும் அவரை மறக்கும் போது செலவும் வைக்கப்படும்.

32. ஒத்துழைப்பவராக இருத்தல் என்பதன் அர்த்தம் அடிமையாகுவதல்ல.

33.நம்பிக்கையற்றதில் நம்பிக்கை இழக்காதீர்கள்.

34. அதிகாரம் தேவைப்படும் போது உறுதியாக இருங்கள் வெறுப்புனர்வில் இருந்து பாதுகாத்துக் கொள்ளும் ஒரு வழி மதிப்பை கொடுப்பதாகும்.

35.எல்லா விடயங்களிலும் மரியாதை கொடுப்பவராக இருங்கள்.

36. வெறுப்புணர்வில் இருந்து பாதுகாத்துக் கொள்ளும் ஒரு வழி மதிப்பைக் கொடுப்பதாகும்.

37. சிலவேளைகளில் நீங்கள் செய்யக்கூடிய மிகப் பெரிய பங்களிப்பு மதிப்பைக் கொடுப்பதாகும்.

38. யாராவது உங்களைப் பார்த்து நகைத்தால் ஆகக் குறைந்தது நீங்கள் அவர்களுக்கு மகிழ்ச்சியையாவது கொடுக்கின்றீர்கள் என எண்ணி கோபமடையாதிருங்கள்.

39.அரட்டை அடிப்பவர்களுடன் நீங்களும் ஒத்துப் போகும் போது நீங்களே அவர்கள் அடுத்தபடியாக அவதூறு செய்யும் நபராக இருப்பீர்கள்.

40.முகமலர்ச்சியுடையவராக இருப்பதற்கு தன்னைப் பாராட்டுவதுடன் பிறரையும் அவர்களுடைய சிறப்பியல்புகளுக்காகப் பாராட்டுங்கள்.

41. உங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக மற்றவர்களைக் குற்றம் சாட்டாதீர்கள் காலத்திற்கு உண்மையை வெளிப்படுத்தும் வழி தெரியும்

42. உங்களுடைய சிறப்பியல்புகள் மற்றவர்களை ஆட்கொள்ளலாம். ஆகவே அதை உங்களால் முடிந்தவரை நல்ல முறையில் பயன்படுத்தவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

43. மகிழ்ச்சியை விட மேலான போஷாக்கு எதுவுமே இல்லை.

44. மற்றவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுப்பதே மிகப் பெரிய தர்மமாகும்.

45. எனது மனதைச் சுமைகளைத் சுமக்க அனுமதித்தால் நான் மனச் சுமையால் மிக விரைவில் களைப்படைந்து விடுவேன்.

46. மற்றவர்களுக்கு வேதனை ஏற்படுத்தும் ஒருவரால் உண்மையாக மகிழ்ச்சியாக இருக்க முடியும்.?

47. என்னை ஒத்தவர்களைநான் அவதூறு செய்யும் போதே மற்றவர்களை என்மீது வைத்துள்ள மரியாதையை நான் இழக்கின்றேன்.

48.உங்களை உயர்த்துவதற்கு முயற்சிக்கவும் உங்கள் தரத்தைக் குறைக்காதீர்கள் ஏனெனில் நீங்கள் உங்களுக்கு நண்பனும் உங்களுக்கு எதிரியுமாவீர்கள்.

49. புண்ணியத்திற்காகப் பணம் கொடுப்பது நல்லதுஆனால் ஒரு தூய புண்ணிய ஆத்மாவாக இருப்பது மிகவும் சிறந்ததாகும்.

## மனித தர்மம்

| | | |
|---|---|---|
| கோபத்திலும் | - | பொறுமை |
| ஏழ்மையிலும் | - | நேர்மை |
| தோல்வியிலும் | - | விடாமுயற்சி |
| தரித்திரத்திலும் | - | பரோபகாரம் |
| துன்பத்திலும் | - | தைரியம் |
| செல்வத்திலும் | - | எளிமை |
| பதவியிலும் | - | பண்பு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதாகைகள் மூலம் அஞ்சலி செலுத்தியவர்களுக்கு மனமார்ந்த நன்றிகள்.

01. மாணிக்கப்பிள்ளையார் ஆலயம்
அறங்காவலர் சபை,
உருத்திரபுரம்.

02. கரைச்சிப்பிரதேச சபை
தலைவர், உப தலைவர்,
கௌரவ உறுப்பினர்கள், பணியாளர்கள்.

03. திரு. எஸ். ஜீவராசா
கரைச்சிப்பிரதேச சபை,
வட்டார உறுப்பினர்,
தர்மபுரம்.

04. கிராம அபிவிருத்திச் சங்கம்
உருத்திரபுரம் கிழக்கு,
உருத்திரபுரம்.

05. திரு. பாலசிங்கம் குடும்பத்தினர்
(சம்பந்தி)
பவன் வசந்தன் சுபா
திருநாவற்குளம்,
வவுனியா.

06. அமரர். நல்லையா (மச்சான்) குடும்பத்தினர்.
ந. கிருஸ்ணராஜா (சின்னராசா) (மருமகன்)
கிளிநொச்சி.

07. அமரர். கு. நாகலிங்கம் குடும்பம்
106 டீ10,
உருத்திரபுரம்.

08. அமரர். ச. மு. குடும்பத்தினர்.
118 டீ10,
உருத்திரபுரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. றேகன் காட் வெயார்
டீ10,
சந்தையடி,
உருத்திரபுரம்.

10. டீ 9, டீ10, கமக்காரஅமைப்பு,
உருத்திரபுரம்.

11. பணியாளர் நலன் புரிச்சங்கம்,
கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச்சங்கம்,
கிளிநொச்சி.

12. திருமதி. ம. பத்மாவதி குடும்பம்
106, டீ10
உருத்திரபுரம்.

13. பசுந்தாரகை
சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச் சங்கம்
கிளிநொச்சி.

14. உருத்திரபுரம் சனசமூக நிலையமும்
விளையாட்டுக்கழகமும்

15. உருத்திரபுரம் உதவும் கரங்கள்
(கனடா)

16. ஏ. ஏ. கே. பொறிக்கடவை
அம்மன் றவல்ஸ்

17. வை. நாகரத்தினம் (மணியம்)
127, டீ10, உருத்திரபுரம்.

18. சந்திரசேகரம் முருகன் (ரவி)
இல: 135 டீ10, உருத்திரபுரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

எமது பாசத்தின் உறைவிடமாக வாழ்ந்து அமரத்துவம் அடைந்த எமது அன்புத் தெய்வம் அமரர் **குட்டிப்பிள்ளை கந்தையா** அவர்களின் மரணச் செய்தியை அறிந்து எமக்கு பலவகையிலும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள், ஊரார் அயலவர்களுக்கும், கிராமத்தவர்களுக்கும், புலத்திலும் நிலத்திலுமிருந்து, தொலைபேசி மூலம் அனுதாபச் செய்தி தெரிவித்தோருக்கும், மற்றும் புலம்பெயர் தேச அமைப்புகள், ஊடகங்கள் ஊடாக இரங்கல் தெரிவித்தவர்களுக்கும், இரங்கலுரையாற்றிச் சிறப்பித்தவர்களுக்கும், மரணச் சடங்கில் கலந்து கொண்டோருக்கும், அந்தியேட்டி சபிண்டீகரணக் கிரியைகளைச் செய்த குருமாருக்கும் , பதாகைகள் (பெனர்) மூலம் தங்கள் துயரங்களைப் பகிர்ந்து கொண்டோருக்கும் ஒளிப்படக்காட்சியைப் பதிவு செய்தோருக்கும், அந்தியேட்டி அழைப்பு மற்றும் இந்நூலை வெளியிட்டு உதவிய வேழன் பதிப்பகத்தினரிற்கும், நூலுக்கான நினைவேந்தல் ஆக்கங்களைக் கேட்டவுடன் தந்துதவிய நல்லுள்ளங்களுக்கும் மதிய போசன நிகழ்வில் கலந்து இறுதிக் கிரியைகள் சிறப்புற பல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் என்றும் மறவாத நன்றிகளை மனப்பூர்வமாக சமர்ப்பிக்கின்றோம்....

**தொடர்புகளுக்கு**
**தொலை பேசி இல.**
**077 7485343**

**குடும்பத்தினர்.**
**இல:126, ம 10**
**உருத்திரபுரம், கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கொடியில் பூத்த மலர்கள்

❖ குட்டிப்பிள்ளை + ❖ சின்னத்தங்கம்

- ❖ அன்னப்பிள்ளை + ❖ செல்லம்
- ❖ நாகம்மா + கைலாயப்பிள்ளை
- ❖ கந்தையா
- ❖ இராமநாதர் + தெய்வானைப்பிள்ளை
- ❖ நாகலிங்கம் + சின்னம்மா ( பரமபூபதி)
- பொன்னம்மா + ❖ நாகேந்திரம்
- ❖ தருமலிங்கம் + அந்தோனியாப்பிள்ளை ( வாடியக்கா )
- ❖ மயில்வாகனம் + அன்னக்கிளி
- பரமலிங்கம் + மகேஸ்வரி
- பராசக்தி + ❖ சுப்பிரமணியம்
- இராசமணி + ❖ இரகுநாதன்

❖ கந்தையா + ❖ அன்னப்பிள்ளை

- ❖ குணமணி + அந்தோனிப்பிள்ளை
- ❖ நல்லையா + ❖ பராசக்தி , அமிர்தராணி
- பொன்னம்மா
- தம்பிஜயா + மனோன்மணி

(கந்தையா + பொன்னம்மா)

**கணேசலிங்கம் + ❖ கலாதேவி**
- யதார்த்திகா
- பிரார்த்தன்
- ❖ கவியார்த்திகா
- நிதார்த்தன்
- (யதார்த்திகா) + இரஜீவன் → ஆயீசன்

**பிரியசாந்தா + தர்மநாயகம்**
- தர்மநாயகம் நேருஜி
- யசீந்திரன் + சிவா
- ரஜனி
- ராஜினி
- (ரஜனி) + விஜயராசா → யகிசன், அபிசன்
- (ராஜினி) + தர்மேந்திரா → சகேஸ்னா

**❖ புவனேந்திரராசா + கோணேஸ்வரி**
- ரதீசியா
- ரதீபன்
- ரதீபா
- சங்கீர்த்தனா
- (ரதீசியா) + தயாளன் → அனிகா, அபினேஸ்

**விக்னேஸ்வரன் + பவானி**
- மலரவன்
- துசானி

**மகேஸ்வரன் + யோகநந்தினி**
- பிரவீன்
- அட்சரா
- அஷானா

**குககுமாரராசா + வித்தியகுமாரி**
- ஆதித்தன்
- பவஹர்ணி

**பிரபாகரன் + தயாநிதி**
- லட்சியன்

❖ அமரர்களைக் குறிக்கும்
\+ துணைகளைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேரும் விழுதும்



வேரும் விழுதுமாய்
ஊரும் உறவுமாய்
ஏரும் வாழ்வுமாய்
சீரும் சிறப்புடன்
பேரும் புகழுடன்
வாழ்ந்த பெருமகன்
ஆண்டுகள் நூறதை
எட்டிய பெருமையில்
நீண்டு மனங்களில்
நின்று நிலைத்துமே
பூண்டநற் கோலமாய்
புவியினில் மறைந்தவர்
தூண்டவே நினைவுகள்
துயருற மனங்களும்
ஆண்டவனடியினில்
அமரத்துவமானவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேழன் பதிப்பகம், கிளிநொச்சி. 021 228 5579